விலை: 60.00
பக்கங்கள் - 24
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
E-mail: valampurii@yahoo.com
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
## சங்குநாதம்




சங்கு 26
ஒலி 129 வள்ளுவர் ஆண்டு 2056 சித்திரை 14 ஞாயிற்றுக்கிழமை (27.04.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

### உயர்தரப் பரீட்சை
## பெறுபேறுகள் வெளியாகின

(கொழும்பு)
2024 ஆம் ஆண்டுக்கான க.பொ.த உயர்தரப் பரீட்சையின் பெறுபேறுகள் நேற்று வெளியாகின.
இந்நிலையில் www.doenets.lk அல்லது www.results.exams.gov.lk என்ற இணையத்தளங்


23ஆம் பக்கம் பார்க்க

## யாழ்.இந்துவில் 55 பேருக்கு 3 A

(யாழ்ப்பாணம்)
க.பொ.த உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் நேற்று

20ஆம் பக்கம் பார்க்க

### உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள்
## யாழ்.மாவட்ட ரீதியில் முதலிடம் பெற்றவர்கள்



கணிதப் பிரிவு
ஹாட்லிக் கல்லூரி
கந்ததாசன் தசரத்



உயிரியல் பிரிவு
யாழ்.இந்துக் கல்லூரி
யமுனானந்தா
பிரணவன்



வர்த்தகப் பிரிவு
யாழ்.இந்துக் கல்லூரி
விஜயசுந்தரம்
வாரணன்



பொறியியல்
தொழில்நுட்பப் பிரிவு
யாழ்.மத்திய கல்லூரி
வியாகர்ணன்
பிரவீன்

*(யாழ்ப்பாணம்)* வெளியாகியுள்ள க.பொ.த உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளில் யாழ். மாவட்ட ரீதியில் கணிதப் பிரிவில் ஹாட்லிக் கல்லூரி மாணவன் கந்ததாசன் தசரத் தேசிய ரீதியில் 2ஆம் இடத்தையும் யாழ்.மாவட்ட ரீதியில்

20ஆம் பக்கம் பார்க்க

### படையினரால் கையகப்படுத்தப்பட்டுள்ள
# அனைத்து நிலங்களும் விடுவிக்கப்படும்
### கிளிநொச்சி மண்ணில் ஜனாதிபதி அநுர உறுதி

*(கிளிநொச்சி)*
போரின்போது படையினரால் கையகப்படுத்தப்பட்டுள்ள பொதுமக்களின் அனைத்துக் காணிகளும் விடுவிக்கப்படும் என ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

*(23ஆம் பக்கம் பார்க்க)*



### கணிதப் பிரிவில் ஹாட்லி மாணவன்
## தேசிய ரீதியில் 2ம் இடம் மாவட்ட ரீதியில் முதலிடம்

வெளியாகியுள்ள க.பொ.த உயர்தரப் பரீட்சையில் கணிதப் பிரிவில் யாழ்ப்பாணம் ஹாட்லிக் கல்லூரி மாணவன் கந்ததாசன் தசரத் தேசிய ரீதியில் 2ஆம் இடத்தையும் மாவட்ட ரீதியில் முதலாமிடத்தையும் பெற்றுள்ளார். (ம-7,4,60)

### உயிரியல் பிரிவில்
## மருத்துவர் யமுனானந்தாவின் மகன்களான இரட்டையர்கள்
### தேசிய ரீதியில் 3ஆம், 5ஆம் இடங்கள் மாவட்ட ரீதியில் 1ஆம், 2ஆம் இடங்கள்



(யாழ்ப்பாணம்)
வெளியாகியுள்ள க.பொ.த உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் யாழ்.



23ஆம் பக்கம் பார்க்க

### யாழ்.மாநகர சபை
## பொதுச் சுகாதாரப் பகுதியினர் நாளை பணிப் புறக்கணிப்பு

(யாழ்ப்பாணம்)
யாழ்.மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் மற்றும் குடும்ப நல உத்தியோகத்தர்கள் நாளை திங்கட்கிழமை பணிப் புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளதாக அறிவித்துள்ளனர்.

23ஆம் பக்கம் பார்க்க

## வடக்கு - தெற்கு என்ற பாகுபாடின்றி அனைவருக்கும் சம உரிமை வழங்கப்படும்
### இறுதிக்கட்டப் போர் நடந்த முல்லை மண்ணில் அநுர

(முல்லைத்தீவு)
வடக்கு - தெற்கு என்ற பாகுபாடின்றி அனைத்து மக்களுக்கும் சமமான உரிமை வழங்கப்படும் என ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.
முல்லைத்தீவு புதுக்குடியிருப்புப் பகுதியில் நேற்று இடம்பெற்ற மக்கள் சந்திப்பிலேயே அவர் இதனைத்

23ஆம் பக்கம் பார்க்க

## யாழ்.பல்கலைக்கழக மாணவன் சடலமாக மீட்பு

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் 3ஆம் வருடத்தில் கல்வி பயிலும் மாணவன் ஒருவன் நேற்றுச் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.
கொக்குவில் பிறவுண் வீதியில் அமைந்துள்ள ஒரு விடுதியில் அவரது சடலம் மீட்கப்

23ஆம் பக்கம் பார்க்க

## ஆட்டோ மோதியதில் குடும்பஸ்தர் மரணம்


(யாழ்ப்பாணம்)
ஆட்டோ மோதியதில் ஏற்

23ஆம் பக்கம் பார்க்க

## வடக்கில் இன்று வெப்பம் உச்சம்

(யாழ்ப்பாணம்)
வட மாகாணம் உட்பட நாட்டில் பல பிரதேசங்களில் இன்று வெப்பநிலை உச்ச நிலையில் காணப்படும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு

23ஆம் பக்கம் பார்க்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## உள்ளூராட்சி மன்றத் தேர்தல் - 2025

### இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின்

தலைவர் C.V.K சிவஞானம்,
பொதுச்செயலாளர் M.A சுமந்திரன் மற்றும் கட்சியின்
பாராளுமன்ற உறுப்பினர்கள் பங்கு பற்றும்

### "மாபெரும் பொதுக்கூட்டம்"

இக் கூட்டத்திற்கு விஷேடமாக எழுச்சி நாயகன் இளைஞர்களின்
நம்பிக்கை நட்சத்திரம் மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினர்

### திரு. இராசமாணிக்கம் சாணக்கியன்

அவர்கள் கலந்து சிறப்பிக்கின்றார்.

தலைமை : சந்திரலிங்கம் சுகிர்தன்
(முன்னாள் மாகாணசபை உறுப்பினர்)
இடம் : மைக்கல் விளையாட்டுக்கழகம், மாலுசந்தி
காலம் : 27.04.2025
நேரம் : பி.ப 4.00 மணி

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
ஆச்சி, அப்பு ஆண்ட மண்ணை எதிரி ஆள்வதா?

(C-2822) நம் ஊர் தமிழரசோடு

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி



## MOOLAI KAVRIS(PVT) LIMITED

Company Number - PV00323331

**புறோயிலர் இறைச்சிக் கோழி விற்பனை**

மேற்படி பதிவு செய்யப்பட்ட நிறுவனத்தினால் சுகாதார
முறைப்படி வளர்க்கப்படும் இறைச்சிக்கோழி விற்பனைக்கு உண்டு.

(4034) – முகாமையாளர்

தொடர்புகளுக்கு : 077 345 0036, 077 464 3625


## மரண அறிவித்தல்

பிறப்பு 19 - 12 - 1945



இறப்பு 25 - 04 - 2025

## கதிர்காமநாதன் கமலாம்பாள்

அரியாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கதிர்காமநாதன் கமலாம்பாள் அவர்கள் 25.04.2025 வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - அருளம்மா தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம் - செல்லம்மா தம்பதியினரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற கதிர்காமநாதனின் அன்புத் துணைவியாரும் சியாமா, மகிந்தன், சுகந்தன் ஆகியோரின் அன்புத் தாயாரும் புஷ்பராணி, ஜெயரட்ணம் (லண்டன்), தில்லைநாயகி(கனடா), டிபாலதாஸ்(கனடா) மற்றும் காலஞ்சென்ற வசந்தி ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ் சென்றவர்களான கனகாம்பிகை, மகேஷ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனியும் தர்மினி, சத்தியபாமா ஆகியோரின் அன்பு மாமியாரும் சுகணா, தமிழினியன், குயிலினியன், தனுஷிகா மற்றும் திவாகர் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 27.04.2025 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

கண்டி வீதி, (தபால்கட்டை சந்திக்கு அருகில்)
அரியாலை,
யாழ்ப்பாணம்.

(4037)

தகவல்:
குடும்பத்தினர்

## மாதவத்தின் தாய்க்கு மனப்பூர்வ அஞ்சலிகள்...

கரு சுமந்து கனிவுற்று கருணை மேவி
கண்ணியமாய் கனவுமிக காத்து வளர்த்து
உரு தந்து உணர்வுருகி உவப்பில் தோய
உள்ளன்பால் உயிர்ப்பாக்கி உயர்வுடனே
வருங்கால சமயநெறி தனித்தே ஓங்க
வல்லமை ஞானச் செழுமை துணைசேர
திரு மிகுந்த தொண்டுநாதன் சுவாமிகளை
திசை விளங்கத் தந்த தாயே போற்றி போற்றி....

மாசில்லா அன்பு கொண்ட மாதவத் தாயின் ஆன்மா என்றும்
ஈசனவன் பாதத்தில் இணைந்திருக்க பிரார்த்தனைகள்.....



என்றும் ஆறுதல் அன்புடன்....

LKP டெம்பிள் கன்ஸ்ட்ரக்‌ஷன் நிறுவனத்தார் மற்றும் ஊழியர்கள் – யாழ்ப்பாணம்.
கலியபெருமாள் புருஷோத்தமன் குடும்பத்தினர், இந்தியா.
ஸ்ரீவீரா பேவர் பிளாக் ஒர்க்ஸ் நிறுவனத்தினர், இந்தியா.
சிவபூமி அறக்கட்டளை, இலங்கை.
Jeyasujan Construction (Shan Co), ஊரெழு.
SKS Construction(Pvt)Ltd நிறுவனத்தினர், யாழ்ப்பாணம்.

இவர்களுடன்
கவிஞர் கு.வீரா

(4039)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




(C-131)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலம்புரியின் வாரமலர்
சங்குநாதம்
நாதம் 490
27.04.2025




# மத மாற்றத்தை கண்டுகொள்ளாத தமிழ் அரசியல்வாதிகள்

தனித் தமிழீழம் கேட்ட ஈழத் தமிழினம் இப்போது தையிட்டி விகாரையோடு தனது உரிமையை மட்டுப்படுத்திக் கொண்டுள்ளது.

இதை இன்னும் சுருங்கக் கூறுவதாயின், இப்போது தமிழர்களுக்கான பெரும் பிரச்சினை தையிட்டி விகாரை என்பது போலவும் தையிட்டி விகாரையை அகற்றி விட்டால், தமிழ் மக்களின் அரைவாசிப் பிரச்சினை தீர்ந்துவிடும் என்பது போலவும் நிலைமை ஆகிவிட்டது.

இங்குதான் முன்னைய ஆட்சியாளர்களும் படைத்தரப்பும் தயாரித்த திட்டம் வெற்றியடைகிறது.

ஆம், தையிட்டியில் தனியார் காணியில் விகாரை அமைப்பதன் மூலம் தமிழர்களின் உரிமை-வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் விவகாரம்-இராணுவம் ஆக்கிரமித்துள்ள நிலபுலம் என அனைத்தும் அமிழ்ந்து போகும்.

தனித்து தையிட்டி விகாரை மட்டுமே பேசுபொருளாகும் என்பது அவர்களின் கணிப்பு.

அவர்கள் எவ்வாறு கணித்தார்களோ அவ்வாறே காரியம் ஆயிற்று.

இப்போது எங்களின் எல்லாப் பிரச்சினைகளிலும் முதன்மைப் பிரச்சினை தையிட்டி விகாரை என்பதாக நிலைமை முடிந்து போகிறது.

இங்கு தான் நம்மவர்கள் ஓர் உண்மையைப் புரிந்து கொள்ளத் தவறுகின்றனர்.

அதாவது, தையிட்டி விகாரை என்பது தனியார் காணியில் அமையப்பெற்றதனால் அதனைக் காணி உரிமையாளர்கள் எதிர்க்கின்றனர்.

மற்றும்படி தையிட்டியில் விகாரையை அமைக்கக்கூடாது என்பதுதான் எமது நிலைப்பாடு எனில், அது பொது வெளியில் நியாயமற்ற விடயமாகவே கருதப்படும்.

இதை நாம் கூறும் போது, சிலர் எதிர் விமர்சனம் செய்யலாம். உண்மையில் நியாயமற்ற எதிர் விமர்சனங்களும் ஆய்ந்தறியாமல் எழுந்தமானமாக முன்வைக்கின்ற கருத்துகளுமே எங்கள் இனத்தின் சாபக்கேடாயிற்று என்பதை சம்பந்தப்பட்டவர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

ஆம், தமிழர் பிரதேசத்தில் பௌத்த விகாரைகளை அமைப்பதற்கான எங்களின் எதிர்ப்பு என்பது, தமிழர்கள் சாராத-அவர்கள் வழிபடாத விகாரையை தமிழர் பிரதேசத்தில் அமைப்பது ஏன்? ஆக, தமிழர் பிரசேத்தில் விகாரை அமைக்கப்படுமாக இருந்தால், அது பௌத்த ஆக்கிரமிப்பு என்றே பொருள் கொள்ளல் வேண்டும் என்பது எம்மவர்களின் வாதமாக இருக்கிறது.

அதேநேரம் தமிழர் பிரதேசங்களில் ஏலவே அமையப்பெற்ற விகாரைகள் மற்றும் பௌத்த துறவிகளின் ஈமத்துவ அடையாளங்கள் என்பன தமிழ்ப் பௌத்தர்கள் இருந்த காலத்தவை என்பதாக நம் விளக்கம் அமைகிறது.

சரி, தமிழ்ப் பௌத்தர்கள் இந்த மண்ணில் இருந்தார்கள் என்பதை ஏற்றுக் கொண்டால், இப்போது தமிழ்ப் பௌத்தம் அறவே இல்லை என்பது மறைமுகமாக அங்கீகரிக்கப்படுகிறது.

இங்குதான் தமிழ்ப் பௌத்தம் அழிந்து போனமைக்குக் காரணம் என்ன என்று ஆராய்கின்ற தேவை ஏற்படும்.

அவ்வாறானதொரு ஆய்வு முன்னெழுமாயின், சிங்கள பௌத்தர்கள் மத மாற்றத்தைச் செய்யவில்லை. அவர்கள் சைவத் தமிழர்களை பௌத்தர்களாக மாற்றும் வேலைத்திட்டத்தை நினைத்தும் பார்க்கவில்லை.

சைவ சமயம் எங்ஙனம் மதமாற்றத்தை செய்யவில்லையோ அவ்வாறே பௌத்தமும் மதமாற்றத்தைச் செய்யவில்லை என்பது உறுதி செய்யப்படும்.

அவ்வாறு சிங்கள பௌத்தர்கள் தமிழர்களை பௌத்த மதத்திற்கு மாற்றி இருப்பார்களாயின், தையிட்டி விகாரை என்பது பேசாப் பொருளாகியிருக்கும்.

ஏனெனில் இலங்கைத் திருநாட்டில் நீண்ட நெடுங்காலம் இருக்கக்கூடிய பௌத்த மதத்தை தமிழ் மக்கள் எதிர்ப்பதற்கான ஒரே காரணம் பௌத்தம்-பௌத்த விகாரை-கௌதம புத்தர் என்ற சமய சாசனத்தை தமிழர்கள் எவரும் பின்பற்றுவதில்லை என்பது தான்.

அதேநேரம் காலணித்துவத்தினூடு எங்கள் மண்ணுக்குள் நுழைந்த கிறிஸ்தவ சமயத்தை தமிழர்களாகிய நாம் ஏற்றுக் கொள்கின்றோம். இதற்குக் காரணம் தமிழ் மக்களில் ஒரு பகுதியினர் கிறிஸ்தவத்தைப் பின்பற்றுகின்றனர்.

எனவே அந்நியர்கள் சைவாலயங்களை இடித்து அதே இடத்தில் தேவாலயங்களை அமைத்த போதிலும் அதுபற்றி நாம் கிலேசம் கொள்ளவில்லை-கோஷம் எழுப்பவில்லை-உண்ணாவிரதம் இருக்கவில்லை அல்லது அயோத்தி இராமர் கோயில் போல, இடிக்கப்பட்ட அதே இடத்தில் மீளவும் சைவாலயத்தை அமைக்க வேண்டும் எனவும் கேட்கவில்லை.

ஆக, எங்களின் சுயத்தைப் பாதுகாக்கின்ற நினைப்பு எங்கள் தமிழ் அரசியல்வாதிகளிடம் அறவே இல்லை என்பது இதிலிருந்து உறுதியாகிறது.

இதை இன்னமும் ஒரு படி கடந்து நாம் கூறுவதாயின், சிவபூமி என்று போற்றப்பட்ட ஈழத்திருநாட்டில் இப்போது எங்கு பார்த்தாலும் மத மாற்றப் பிரசுரங்கள் ஒட்டப்பட்டுள்ளன.

அதே போன்று தேவ சாட்சியக் கூட்டங்களும் மதமாற்றத்தை ஊக்கப்படுத்தும் துண்டுப்பிரசுரங்களும் கையளிக்கப்படுகின்றன.

ஆனால் இதேவேலையை பௌத்த சிங்களவர்கள் நம்மண்ணில் நின்று, ஓ! தமிழ்ப் பெருமக்களே! உங்களை கௌதம புத்தபிரான் அழைக்கின்றார். உங்களைப் பிடித்த சாத்தானை ஓட்ட அவர் நினைக்கின்றார். நீங்கள் பௌத்தத்திற்கு வாருங்கள் என்று அழைப்பு விட்டால், நம் தமிழ் அரசியல்வாதிகள் போர்க்கொடி தூக்காமல் இருப்பார்களா என்ன?

ஆக, ஒரு புறத்தில் எமக்கு எந்த விதத்திலும் தொடர்பு இல்லாத ஜெருசலேத்து மதத்தை ஏற்றுக்கொள்ளும் நாம் ஓர் இந்துவான கௌதம புத்தபிரானை ஏற்றுக்கொள்வதில எமக்குள் இருக்கக்கூடிய வெறுப்பு என்பது; ஜெருசலேம் எங்களைப் பாராளுமன்றத்துக்கு அனுப்புகின்ற வாக்குப் பலத்தைக் கொண்டிருக்கிறது என்பதைத் தவிர வேறு எந்தக் காரணமும் இருக்க முடியாது.

இதை நாம் கூறும் போது யாரேனும் எங்களை மதக் காழ்ப்புணர்வு கொண்டு நோக்கலாம்.

ஆனால், புதுப் புது மத மாற்றங்கள் எம் மண்ணில் நுழைவதன் மூலம் சைவமயம் மட்டுமல்ல அவை கத்தோலிக்க சமயத்தையும் சிதைக்கின்றன. எனினும் இந்த உண்மையை நம் தமிழ் அரசியல்வாதிகள் கிஞ்சித்தும் நினைப்பதில்லை.

■ விதுரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காஷ்மீர் பயங்கரவாதம்: முற்றுப்புள்ளிக்கான தருணம்!



காஷ்மீரின் பஹல்காமில் நடத்தப்பட்ட பயங்கரவாதத் தாக்குதல் மிகுந்த அதிர்ச்சியை ஏற்படுத்துகிறது. இத்தகைய செயல்கள் மூலம் காஷ்மீரில் பதற்றத்தைப் பரவச் செய்யும் முயற்சிகளில் ஈடுபடும் சக்திகள் முறியடிக்கப்பட வேண்டியதன் அவசியத்தை இந்தச் சம்பவம் உணர்த்துகிறது.

காஷ்மீர் மாநிலத்தின் அனந்த்நாக் மாவட்டத்தில் உள்ள பஹல்காமின் புகழ்பெற்ற சுற்றுலாத் தலமான பைசரன் பகுதியில், ஏப்ரல் 22 அன்று நடத்தப்பட்ட தாக்குதலில் இரண்டு வெளிநாட்டினர் உட்பட 26 பேர் உயிரிழந்தனர். இந்தத் தாக்குதலுக்கு பாகிஸ்தானைச் சேர்ந்த பயங்கரவாத அமைப்பான லஷ்கர்–இ–தொய்பாவின் நிழல் குழு என்று கருதப்படும் தி ரெசிஸ்டண்ட் ஃபிரண்ட் (டிஆர்எஃப்) பொறுப்பேற்றிருக்கிறது.

அமெரிக்காவின் துணை ஜனாதிபதி ஜேடி வான்ஸின் இந்திய வருகையின் போது இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கிறது. ஜூலை 3 முதல், அமர்நாத் புனிதப் பயணத்தில் இலட்சக்கணக்கானோர் கலந்து கொள்ளவிருக்கும் நிலையில், இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டிருப்பதும் கவனத்தை ஈர்க்கிறது. மும்பைத் தாக்குதலில் மூளையாகச் செயற்பட்ட தஹாவர் ஹுசைன் ராணா அமெரிக்காவிலிருந்து இந்தியாவுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கும் நிலையில் இத்தகைய தாக்குதல் நடத்தப்படுவது பல்வேறு ஊகங்களுக்கு வழிவகுக்கிறது.

இந்தத் தாக்குதலில் தங்களுக்குப் பங்கு இல்லை என்று பாகிஸ்தான் மறுத்தாலும், தாக்குதல் நடத்திய கும்பலில் வெளிநாட்டைச் சேர்ந்தவர்களும் இருந்தது தெரியவந்திருப்பதால், பாகிஸ்தானின் மறுப்பை இந்தியா ஏற்கவில்லை. காஷ்மீர் பாகிஸ்தானின் கழுத்து நரம்பைப் போன்றது என்று பாகிஸ்தான் இராணுவத் தளபதி ஆசிம் முனீர் சில நாட்களுக்கு முன்னர் பேசியது, இந்தத் தாக்குதலைத் தூண்டியிருக்கலாம் என்றே கருதப்படுகிறது. இது உள்ளூர் பயங்கரவாதக் குழுக்களின் தாக்குதல் எனச் சொல்லி தப்பித்துக்கொள்ளும் உக்தியைப் பாகிஸ்தான் கையாள்வதாகவும் விமர்சனங்கள் எழுந்திருக்கின்றன.

காஷ்மீர் பண்டிட்கள், வெளிமாநிலத் தொழிலாளர்கள், அரசு ஊழியர்கள் எனப் பலரும் பயங்கரவாதத் தாக்குதல்களுக்கு இலக்காகி வருகின்றனர். பாதுகாப்புப் படையினரின் பதில் தாக்குதலில் பயங்கரவாதிகள் கொல்லப்பட்டாலும் புதிய உக்திகளுடன் பயங்கரவாத அமைப்புகள் செயற்படுவதை முழுமையாகத் தடுக்க முடியவில்லை. இந்தத் தாக்குதல் பிரதமர் மோடியை நேரடியாகப் பாதிக்கும் வகையில் அமைய வேண்டும் என்று பயங்கரவாதிகள் செயற்பட்டிருப்பது தெளிவாகத் தெரிகிறது.

பிரதமர் மோடி அண்மையில் சவுதி அரேபியாவுக்குச் சென்ற போது பாகிஸ்தான் வான்வழியைப் பயன்படுத்தியிருந்தாலும், இந்தத் தாக்குதலைத் தொடர்ந்து சவுதியிலிருந்து அவசரமாகப் புறப்பட்டு வந்த பிரதமர் இந்த முறை பாகிஸ்தான் வான்வழியைத் தவிர்த்து விட்டார். பிரதமரின் உத்தரவின் பேரில், நிலவரத்தை நேரில் ஆய்வு செய்ய உள்துறை அமைச்சர் அமித் ஷா காஷ்மீருக்குச் சென்றிருக்கிறார். எதிர்க்கட்சிகள் ஒருமித்த குரலில் இந்தத் தாக்குதலைக் கடுமையாகக் கண்டித்திருக்கின்றன.

காஷ்மீர் தலைநகரிலிருந்து 90 கி.மீ. தொலைவில் அமைந்திருக்கும் பஹல்ஹாமில் தாக்குதல் நடத்தப்பட்டிருப்பது பல்வேறு சந்தேகங்களை எழுப்பியிருக்கிறது. காஷ்மீரில் சுற்றுலாவை அடிப்படையாகக் கொண்ட பொருளாதாரமே பிரதானம் என்பதால், இத்தகைய நிகழ்வுகள் சுற்றுலாத்துறையை முடக்கிவிடும் அபாயமும் உள்ளது. காஷ்மீருக்குச் சிறப்பு அந்தஸ்து அளித்து வந்த 370ஆவது சட்டக்கூறு நீக்கப்பட்ட பின்னர் காஷ்மீரில் அமைதி நிலவுவதாக அரசுத் தரப்பிலிருந்து முன்வைக்கப்பட்ட நம்பிக்கை வார்த்தைகள் குலையும் வகையில் இந்தச் சம்பவங்கள் அமைந்திருப்பதையும் மறுக்க முடியாது.

இத்தகைய சூழலில், இந்தத் தாக்குதலிலும், இதற்கு முன்பு நடத்தப்பட்ட சில தாக்குதல்களிலும் பாகிஸ்தானின் பங்கு இருப்பதை உறுதி செய்ய அரசு தீர்க்கமாகச் செயற்பட வேண்டும். இந்தத் தாக்குதலைச் சர்வதேசச் சமூகம் வன்மையாகக் கண்டித்திருக்கும் நிலையில், தாக்குதலுக்குக் காரணமானவர்கள் சர்வதேச நீதிமன்றத்தின் முன்பு நிறுத்தப்பட வேண்டும். இனியும் இப்படியான தாக்குதல்களில் ஈடுபட எந்தச் சக்தியும் நினைக்காத அளவுக்கு உறுதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்!

த – ஹிந்து



## இந்தியா – பாகிஸ்தான்

# கொதி நிலையில் எல்லை மூழுமா போர்?



அபிமன்யு

உலக நாடுகள் ஏதோ ஒரு வகையில், வடிவத்தில் முரண்பட்டுக் கொண்டுதான் இருக்கின்றன. இது இன்று நேற்று தொடங்கிய விடயமல்ல. ஆயினும் அதிநவீன வளர்ச்சி, அதிகாரப் போட்டியின் உச்சம் நாடுகளிடையே பிரிவினையை ஏற்படுத்திவிட்டது.

இவை இன ரீதியாகவும் மத ரீதியாகவும் ஏற்பட்டிருப்பதுதான் மிகக் கொடுமையானது. உலக வரலாற்றில் உலக அழிவுகளுக்குக் காரணமானவை போர் என அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டாலும், உலகத் தலைவர்கள் போர் விரும்பிகளாக இருப்பது தான் வேதனை.

அந்தவகையில் ரஷ்ய – உக்ரைன் போர், இஸ்ரேல் – ஹமாஸ் போரைக் குறிப்பிடலாம். இந்நிலையில் இந்தியாவிற்கும் பாகிஸ்தானுக்குமிடையில் போர் தொடங்கும் அபாயம் எழுந்துள்ளமை உலகை அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது.

கடந்த 22ஆம் திகதி இந்தியாவின் காஷ்மீர் பகுதியில் உல்லாசப் பயணிகள் கூடும் இடத்திற்குள், இந்திய இராணுவம் போல வேடமிட்டு புகுந்த தீவிரவாதிகளின் தாக்குதலில் 26 பேர் உயிரிழந்த நிலையில், இந்தியா பாகிஸ்தான் மீது எப்போதும் போர் தொடுக்கும் அச்சம் எழுந்துள்ளது.

இந்தியாவிலிருந்து பாகிஸ்தான் வரை ஓடிக்கொண்டு இருக்கும் சிந்துநதி ஒப்பந்தத்தை இரத்துச் செய்வதாகவும் இந்தியா – பாகிஸ்தான் எல்லைப் பகுதியான வாகா எல்லையை உடன் மூடுவதாகவும் இந்தியாவில் உள்ள பாகிஸ்தானியர்கள் உடன் நாட்டை விட்டு வெளியேற வேண்டும் எனவும் இந்திய அரசு அதிரடியாக அறிவித்திருக்கின்றமை போர்ப்பதற்றம் இன்னும் அதிகரித்துள்ளது.

தொடர்ந்து இந்தியாவுக்கு அச்சுறுத்தலாக இருக்கும் தீவிரவாதிகளுக்கு பாகிஸ்தான் அடைக்கலம் கொடுப்பதாகவும் அவர்களை ஒழித்துக்கட்ட பாகிஸ்தான் தயாராக இல்லை என்றும் இந்தியா குற்றம் சாட்டிவரும் நிலையில், காஷ்மீர் தீவிரவாதத் தாக்குதல் மேலும் கொதி நிலையை ஏற்படுத்தியுள்ளது.

தீவிரவாதத் தாக்குதலில் கணவனை இழந்த மனைவி ஒருவர் கூறுகையில், கணவனை தீவிரவாதிகள் சுட்டுக் கொன்ற நிலையில் என்னை ஏன் விட்டு வைத்திருக்கிறீர்கள், என்னையும் சுட்டுக் கொன்றுவிடுங்கள் என கதறியிருக்கிறார். அதற்கு நீ உயிருடன் இருந்து இங்கு நடந்தவற்றை இந்தியப் பிரதமர் மோடியிடம் கூறு எனக் கூறியதாக அவர் தெரிவித்திருக்கிறார்.


இந்தியா – பாகிஸ்தான் மோதுவது இது முதற் தடவையல்ல ஆயினும் இம்முறை இந்தியா – பாகிஸ்தானிற்கு இடையே போர் மூழுமாயின் அது நிச்சயம் உலகப்போருக்கு வழிவகுக்கும் என்பதில் மாற்றுக் கருத்தேதும் இல்லை.

இந்தியா, பாகிஸ்தானைத் தாக்கினால் பாகிஸ்தானுக்கு சீனா உதவி புரியும். அது அமெரிக்காவுக்கு கோபத்தை ஏற்படுத்தும். அமெரிக்காவுக்கு கோபம் ஏற்பட்டு விட்டால் அதன்பின் எதையும் சொல்லித்தான் புரிய வேண்டும் என்ற தேவை இல்லை.


காஷ்மீர் தீவிரவாத தாக்குதலுக்கு இந்தியா பதிலடி கொடுத்தே தீரும். அந்தப் பதிலடி இரு நாடுகளுக்குமிடையேயும் போர் ஏற்பட வாய்ப்புக்களாக அமைந்துவிடும். எது எவ்வாறாயினும் இந்தியாவின் பதிலடியை எதிர்கொள்ள பாகிஸ்தானும் தயாராகி விட்டது என்பது தெளிவாகப் புரிகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# ஆலடி மாநாடு



வி.ரி.சிவலிங்கம்



ச.உமாசுதன்



## சர்வதேச விளையாட்டு மைதானம் மண்டைதீவுக்கு அபிவிருத்தி கிட்டுமா?

வாத்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர். இறை வணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறை வணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து பண்டிதர் பரமலிங்கம் எழுந்தார்.

சிரேஷ்ட சட்டத்தரணி வி.ரி.சிவலிங்கம் அவர்கள் காலமாகிவிட்டார். சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ்.பிராந்தியத்தில் நிர்வாக உத்தியோகத்தராக இருந்து, இடர் காலத்தில் சிறந்த சேவையாற்றியவர். அவருக்கு இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்துவோம் எனக் கூற, அனைவரும் எழுந்து நின்று இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து வாத்தியார் வைத்திலிங்கம் எழுந்தார். கொக்குவில் இந்துக் கல்லூரியின் உப அதிபராக இருந்து ஓய்வு பெற்ற ச.உமாசுதன் அவர்கள் காலமாகிவிட்டார்.

கொக்குவில் இந்துக் கல்லூரியின் விளையாட்டுத்துறைப் பொறுப்பாசிரியராக இருந்து அர்ப்பணிப்போடு சேவையாற்றியவர். அவருக்கு இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்துவோம் எனக் கூற, மீண்டும் அனைவரும் எழுந்து நின்று இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து ஆலடியில் அமைதி நிலவியது. அமைதியைக் குலைக்க விதானையார் விசுவலிங்கம் குரல் கொடுத்தார்.

**விதானையார்:-** மண்டைதீவில் சர்வதேச விளையாட்டு மைதானம் அமைப்பதற்கான ஏற்பாடுகள் நடப்பதாகக் கேள்விப்பட்டன்.

நல்ல காரியம். சர்வதேச விளையாட்டு மைதானம் அமைவது எங்களுக்கொரு கிடைப்பனவு.

எனினும் சர்வதேச விளையாட்டு மைதானத்தோட அந்த இடம் அமையப் பெறும் மண்டைதீவையும் அபிவிருத்தி செய்ய வேணும்.

இதைவிட்டிட்டு சர்வதேச விளையாட்டு மைதானம் அமைகிற இடத்தை மட்டும் துலங்கச் செய்தால், அதனால மண்டைதீவு மக்கள் மிகவும் பாதிப்படைய வேண்டி வரும்.

ஆகையால மைதானத்தை அமைக்கின்ற அதேநேரத்தில, மண்டைதீவை எப்படி அபிவிருத்தி செய்வது, அந்த மைதானத்தால அந்த ஊரில உள்ளவர்களுக்குக் கிடைக்கக்கூடிய வேலை வாய்ப்பு என்பன பற்றியெல்லாம் ஊர் மக்களோட சம்பந்தப்பட்டவர்கள் கலந்தாலோசிக்க வேணும்.

இதைவிட்டிட்டு சர்வதேச விளையாட்டு மைதானத்தை அமைப்பதில் மட்டும் கண்ணும் கருத்துமாக இருந்தால், அதால மண்டைதீவு மக்கள் பல்வேறு அசௌகரியங்களை சந்திக்க நேரிடும்.

**கங்காணி:-** விதானையார் சொல்லுறதில உண்மை இருக்கத்தான் செய்யுது.

மண்டைதீவு- அல்லைப்பிட்டி இணைப்பு வீதியான மண்டைதீவு தில்லேஸ்வரம் சிவன் வீதி இன்னமும் புனரமைக்கப்படாமல் இருக்குது.

இதால மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்குகினம்.

எனவே இது விடயத்தில சம்பந்தப்பட்டவர்கள் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு கங்காணி கூற, ஆலடி நிசப்தமாகியது.

நிசப்தத்தைக் கலைக்க சாத்திரியார் சதாசிவம் குரல் கொடுத்தார்.

**சாத்திரியார்:-** நாங்கள் எதைப்பற்றிக் கதைத்தாலும் எங்கட இளம் சமூகத்திட்ட ஆன்மீக நாட்டத்தை ஏற்படுத்த வேணும்.

இதற்காகப் பொருத்தமான நடவடிக்கைகளில சமய, சமூக அமைப்புக்கள் இறங்குவது கட்டாயம்.

**சிறாப்பர்:-** என்ன சாத்திரியார் திடீரெண்டு ஆன்மீகம் பற்றிச் சொல்லுறியள்.

**சாத்திரியார்:-** இஞ்சே சிறாப்பர் உலகம் முழுக்க நோய் வாய்ப்பட்டுக் கிடக்குது.

எந்த நேரம் எந்த நாட்டில போர் மூழும் என்பது தெரியாமல் இருக்குது.

ஈரானைத் தாக்குகிறதில அமெரிக்காவுக்கு அதீத ஆர்வம்.

காஸா மீது தாக்குதல் நடத்துறது தான் இஸ்ரேலின் நோக்கம்.

இதுபோல ரஷ்யா - உக்ரைன் போரைச் சொல்லவும் தேவையில்லை.

நிலைமை இது எண்டால், இந்தியாவும் பாகிஸ்தானும் முறுகிக் கொள்ளுகினம்.

இதற்கும் மேலாக, போதைப் பாவனையில எங்கட இளம் சந்ததி தலைகீழாகப் போகுது.

ஆகையால என்னைப் பொறுத்தவரை எங்கும் யுத்தம் நடக்கக் கூடிய கிரக அமைப்புத் தான் தெரியுது.

ஆகையால இதில இருந்து நாங்கள் தப்பிப்பிழைக்க வேணுமாக இருந்தால், அதற்கான ஒரே வழி இறைபிரார்த்தனை தான்.

அதால தான் சொல்லுறன் ஆன்மீக நாட்டத்தை இளைஞர் மத்தியில ஏற்படுத்த வேணும் எண்டு.

இவ்வாறு சாத்திரியார் சதாசிவம் கூறியதும் ஆலடி அமைதியாகியது.

**வாத்தியார்:-** சாத்திரியார் சொன்ன மாதிரி எங்கட இளம் பிள்ளைகளிட்ட போதைப் பாவனை கடுமையாகி வருகுது. அதிலும் சில பாடசாலை மாணவர்கள் போதைப் பாவனைக்கு அடிமையாகி இருப்பதால, ஆசிரியர்கள் கற்பித்தல் செயற்பாட்டை செய்ய முடியாமல் இருக்குதாம். அதிலும் பெண் ஆசிரியர்கள் அச்சத்தோட பாடசாலைக்குச் செல்லுகின்ற பரிதாப நிலையும் ஏற்பட்டுள்ளது.

ஆகையால எங்கள் இளம் பிள்கைள் மத்தியில் ஊடாடுகின்ற போதைப் பாவனையை முற்றுமுழுதாக நிறுத்த வேணும்.

இது தொடர்பில ஒவ்வொரு ஊரிலும் விழிப்புக் குழுக்களை அமைத்து போதைப் பாவனைக்கு அடிமையானவர்களை இனங்கண்டு அவர்களைப் புனர்வாழ்வுக்கு உட்படுத்துவது அவசியம்.

இவ்வாறு வாத்தியார் கூற, அதைத் தானும் ஆமோதிப்பது போல ஆலடிப் பிள்ளையார் கோவில் கண்டாமணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

ஆதித்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





அன்பு வாசகர்களே!

உங்கள் எண்ணத்தில் தோன்றிய கேள்விகளை

076 097 3126

என்ற இலக்கத்திற்கு SMS, Whats App செய்யுங்கள்

பாப்பரசர் மறைவு சமாதானத்தை விரும்பியவர்களுக்கு பெரும் இழப்பல்லவா வியாசரே?

இனிவரும் காலங்களில் தேங்காய் ஒடு பேசுபடு பொருளாகுமா வியாசரே?

**மறப்போம் மன்னிப்போம் என்று கூறுவதை ஏற்றுக் கொள்ளலாமா வியாசரே?**

தாரு-வதிரி

தவறு செய்த ஒருவன் திருந்தி வாழ நினைக்கிறான் எனின் அவன் செய்த தவறை மன்னிப்பதில் தவறேதும் இல்லை. அதுவே மனிதாபிமானமும்.

ஆனால் தவறு செய்தவனோ தன் தவறை உணராமல், தான் தவறேதும் செய்யவில்லை என முரண்பட்டுக் கொண்டிருக்கிறான் எனின், மறப்போம் மன்னிப்போம் எனும் சொல்லாடல் எப்படி எடுபடும்.

ஒரு கொலைக்குற்றவாளிக்கு மன்னிப்பு வழங்கப்படுகிறது எனின், அவனின் மனதில் தான் செய்தது மகா தவறு, இனியொருபோதும் அதைச் செய்ய மாட்டேன் என்ற எண்ணம் தோன்ற வேண்டும் அதுவே மாற்றம்.

**உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தமிழ் மக்கள் சிந்தித்து வாக்களிப்பார்களா வியாசரே?**

குமார்-யாழ்ப்பாணம்

எனது சித்தப்பா நல்ல மனிதர். அவர் தேர்தலில் நிற்கிறார். அதுவும் தமிழ் தேசியக் கட்சியைத் தாண்டி தெற்குக் கட்சியுடன் இணைந்து நிற்கிறார்.

எனது மாமா மிகச் சிறந்த மனிதர். அவர் வேறு ஒருவரை ஆதரித்துப் பிரசாரம் செய்கிறார். அவர் என்னைச் சந்தித்து மருமகனே நீங்கள் இந்தச் சின்னத்துக்கே வாக்களியுங்கள் என்றார். அதுவும் தெற்கைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சி.

சித்தப்பாவா, மாமாவா என்ற பெரும் குழப்பத்தில் இருந்தே நான் மீள முடியவில்லை. இதில் சிந்திப்பதெங்கே. செயற்படுவதெங்கே.

**மனைவியை நேசிப்பவர்கள் தாய் தந்தையரை நேசிக்க மாட்டார்கள் என்பது உண்மையா வியாசரே?**

சிந்துதன்-மந்துவில்

தாய் தந்தையரை நேசிக்காதவர்கள் மனைவியை நேசிக்க மாட்டார்கள் என்பது நூறு விகிதம் உண்மையானது.

பெற்றோரை நேசிக்காதவன் எப்படி மனைவியை நேசிப்பான். அவ்வாறு நேசித்தாலும் அந்த நேசிப்பு உண்மையானதாய் இருக்குமா?

இங்கு ஒரு விடயத்தைக் கூறுகிறேன். பெண்கள் உசாராக இருங்கள்.

எவன் ஒருவன் தன் மனைவியின் பிறந்தநாள் மற்றும் தங்கள் திருமண நாள், காதலர் தின நாள் போன்றவற்றிற்கு மனைவியின் புகைப்படத்தை முகப்புத்தகத்தில் இட்டு My heart என்று பதிவிடுகிறானோ, அவன் தொடர்பில் அவதானமாக இருங்கள்

**இனிவரும் காலங்களில் தேங்காய் ஒடு பேசுபடு பொருளாகுமா வியாசரே?**

மகாலட்சுமி-கொக்குவில்

இப்போதே அது பேசுபொருளாகி விட்டது. ஆம், உலகில் மின்கலத்தில் இயங்கும் கார்களுக்குப் பயன்படுத்தப்படும் மின்கலங்களில் சேர்க்கப்படும் மிக முக்கிய பொருளாக சிரட்டைக் கரி இருப்பது உங்களுக்குத் தெரியுமா?

அந்த சிரட்டைக்கரி துகள்களை தயாரித்து குறித்த கம்பனிகளுக்கு ஏற்றுமதி செய்யப்படும் செய்தி உங்களுக்குத் தெரியுமா?

குறித்த தயாரிப்பு நிறுவனம் உலகில் ஒன்றே ஒன்று தான் இருக்கிறது என்பது உங்களுக்குத் தெரியுமா? அது இலங்கையில் இருக்கிறது என்பதும் அதை இலங்கை கோஉீஸ்வரர்களின் ஒருவர் நடத்துகிறார் என்பதும் உங்களுக்குத் தெரியுமா?




**வாழ்க்கை எப்படிப்பட்டது என்று கூற முடியுமா வியாசரே?**

ராஜ்-வதிரி

பொருத்தமானதாக இருக்கும் என நாம் நினைத்து தேடித் தேடி எடுப்பவை சில நாட்களிலேயே எமக்குப் பொருத்தமற்றதாய் மாறி விடும்.

இதுவே யதார்த்தமாய் நாம் எதிர்பார்க்காமல் எமக்குக் கிடைப்பவை எம் வாழ்வோடு ஒன்றி விடும். இன்றைய மன(ண) முறிவுகளுக்கும் இதுவே காரணமாக அமைகின்றன.

**பூமியைத் தாண்டி வேறு ஒரு கிரகத்தில் உயிரினங்கள் வாழ்வதற்கான சான்றுகள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றதே?**

இந்திரஜித்-மாதகல்

கேட்கும் போதே ஆச்சரியமும் பிரமிப்பும் அதிகமாகி விட்டது. அந்த உலகில் மனிதர்கள் இருப்பார்களாக? இருந்தால் அவர்கள் எப்படி இருப்பார்கள்? அவர்களின் வாழ்க்கை முறை எவ்வாறிருக்கும்? அவர்களிடம் மனிதனிடம் இருப்பது போல கெட்ட சிந்தனைகளும் கீழ்த்தரமான யோசனைகளும் இருக்குமா? அழிவுகளை ஏற்படுத்தும் அணுஆயுதங்கள் அவர்களிடம் இருக்குமா?

அங்கு விவசாயம் இருக்குமா? இருந்தால் எம்மவர் போல அவர்களும் இரசாயன உரங்களை மண்ணில் கொட்டி மண்ணை மலடாக்கி இருப்பார்களா?

இப்படிப்பட்ட கேள்விகள் பல என்னுள் உதித்தது. இவற்றிற்கு விடை தெரிய வேண்டும். அது தெரியும் வரை நாம் உயிருடன் இருப்போமா என்பது அடுத்த கேள்வி.

**பாப்பரசர் மறைவு சமாதானத்தை விரும்பியவர்களுக்கு பெரும் இழப்பல்லவா வியாசரே?**

அன்ரன்-யாழ்ப்பாணம்

அன்பே இந்த உலகின் ஆணி வேர். அப்படிப்பட்ட தூய அன்பை தன் பதவிக்காலம் முழுவதும் உலகிற்கு பரவச் செய்தவர் போப் பிரான்ஸிஸ் அவர்கள்.

அவர் மிக எளிமையானவர். அவருக்கு வத்திக்கானில் வழங்கப்பட்ட மாளிகையைத் தவிர்த்து சாதாரண வீட்டில் தங்கியிருந்து மக்கள் பணி செய்தவர்.

தென் சூடானில் போர் உச்சம் பெற்ற சமயம் போரை நிறுத்தும்படியும் அப்பாவி மக்கள் உயிர் பறிபோகிறது என்றும் கலங்கினார். தென்சூடான் ஜனாதிபதியைச் சந்தித்த போப் அவரின் காலில் வீழ்ந்து தயவு செய்து போரை நிறுத்துங்கள் என கெஞ்சினார்.

இந்த ஒன்றே போதும் அவரின் அன்பையும் மனிதர்களிடத்தே அவர் கொண்ட பற்றையும் உணர்த்திவிட.

**தங்களின் வாக்கு யாருக்கு வியாசரே? தெரிந்து கொள்ளலாமா?**

சிவம்-வதிரி

தயவு செய்து முதலாவது கொலத்தில் இரண்டாவது கேள்விக்கான பதிலைப் படித்து விட்டு வரவும். நன்றி வணக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சினிமா

## முகம் 10; கமல்



**1.** உலகின் அத்தனை அதி உன்னத சினிமாக்களும் புத்தகங்களும் கமலின் சேகரிப்பில் இருக்கின்றன. மிக நவீனமான ஹோம் தியேட்டரும் உண்டு. மிக நெருங்கிய நண்பர்களை அங்கே சென்று திரைப்படம் பார்க்கவும், சினிமாக்களின் அணிவகுப்பை தரிசிக்கவும் வைப்பதில் பெருவிருப்பம் கொண்டவர்.

**2.** "ஆறாக இருந்தால் தண்ணி குடிக்க வேண்டும். குளமாக இருந்தால் மீன் பிடிக்க வேண்டும்" என்பதுதான் அவரது உணவுக் கொள்கை. பல நாடுகளின் பாரம்பரிய உணவுகளை விரும்பிச்சாப்பிடுவார். ஊர்வன, பறப்பன, ஓடுவன என அனைத்தையும் சாப்பிடும் அசைவப் பிரியர். ஆக்டோபஸ் கூட அவர் விரும்பிச் சாப்பிடும் உணவு.

**3.** கறுப்பு நிற உடைகள் பிடிக்கும். தழையத் தழையப்பட்டு வேட்டி கட்டிக் கொண்டு வந்தால் அன்று முழுக்க உற்சாக மூடில் இருப்பார். வகை வகையான மணிக்கூடுகள், பேனாக்கள், ஜீன்ஸ் பேன்ட்களில் விருப்பம் கொண்டவர்.

**4.** பெரும் தொகுப்பாக்கும் அளவுக்குக் கவிதைகளை எழுதி வைத்திருக்கிறார். எழுதி முடித்ததும் நண்பர்களுக்கு அனுப்பி அபிப்பிராயம் கேட்பார். நல்ல மூடு இருந்தால் குரல் ஜாலங்களுடன் கவிதைகளை நண்பர்களுக்கு வாசித்தும் காட்டுவார். இருந்தும் ஏனோ இன்னமும் தொகுப்பாக வெளியிடாமல் தாமதிக்கிறார் கமல்.


**5.** நடிகர்களில் சிவாஜி, எம்.ஆர்.ராதா, எஸ்.வி.ரங்காராவ் மற்றும் மோகன் லால் ஆகியோரைப் பிடிக்கும். நடிகைகளில் ஊர்வசி, கோவை சரளாவின் நடிப்பு பிடிக்கும். இது தவிர மேற்கத்திய நடிகர்களின் பெரும் பட்டியல் இருக்கிறது. தன்னை வேறு தளத்திற்கு அழைத்து வந்தவர் அனந்து எனப் பெருமைப்பட்டுச் சொல்வார். மறைந்த நாகேஷுடன் கமல் கொண்ட உறவு அப்பா - மகன் போன்றது. தன் படங்களில் "ஹேராம்" அவருக்கு மிகவும் இஷ்டமானது!

**6.** ஜெயகாந்தன் மேல் பற்றையும், கண்ணதாசன் மேல் பிரமிக்கத்தக்க மரியாதையையும் வெளிப்படுத்துவார். ஜெயமோகனோடு அடிக்கடி உரையாடல் நடத்துவார். அவரது அணுக்கமான நண்பர் கிரேஸி மோகனின் இழப்பு அவரை மிகவும் வருத்திவிட்டது.

**7.** கடவுள் மறுப்பாளர்தான். ஆனாலும் ஆத்திகத்தை ஒருநாளும் விமர்சனம் செய்ததே இல்லை. மகள் கோயிலுக்குச் சென்று வழிபட்டா லும் அதில் தலையிட மாட்டார். மகள் ஸ்ருதி இசை கற்க விருப்பம் தெரிவிக்க, முறையாகக் கற்றுக்கொள்வதற்கு வெளிநாடு அனுப்பினார்.


**8.** இளையராஜா மேல் எப்போதும் கூடுதல் பிரியம். கமலின் பெரும்பாலான படங்களுக்கு ராஜாவே இசை! தன்னுடைய ராஜ்கமல் கம்பெனிக்காக ராஜா போட்ட பாடல்களை வைத்தே ராஜாவின் கச்சேரி ஒன்றை நடத்தும் திட்டம் இருவருக்குமே இருக்கிறது. "ப்ரியா" படத்தில் ராஜா இசையமைத்த "ஹே... பாடல் ஒன்று" பாடல் தனக்குக் கிடைத்திருக்க வேண்டும் என்று கமல் விரும்பியிருக்கிறார்.

**9.** கமலுக்கு எப்போதும் சினிமா சென்டிமென்ட்டுகளில் துளியும் நம்பிக்கை கிடையாது. "சாகேத்ராம் திஸ் இஸ் பேக்கப் டைம்!" இதுதான் "ஹேராம்" படத்தின் முதல் வசனம் என்றால் நீங்களே பார்த்துக் கொள்ளுங்கள்.



**10.** மாற்றங்களின் நாயகன் என்றாலும், அவரின் நினைவோடை வற்றாதது! ஞாபகசக்தியில் அவர் ஒரு யானை என்கிறார்கள். மிகச் சிறிய நிகழ்வைக்கூட விரிவாக எடுத்துரைப்பார். பிடித்த பழைய பாடல்கள், வசனங்கள், நிகழ்வுகள் எல்லாம் சூப்பர் கம்யூட்டர் போல அவர் நினைவில் இருக்கும்!

## "நீங்கள் இல்லாமல் இது சாத்தியமில்லை" அஜித்



தமிழ் சினிமாவின் முன்னணி நடிகரும், கார் ரேஸருமான அஜித்குமார் கடந்த சில மாதங்களாக கார் ரேஸிங்கில் தீவிரமாக ஈடுபட்டு வருகிறார்.

இவர், "அஜித் குமார் ரேஸிங்" என்ற பெயரில் கார் ரேஸ் அணி வைத்திருக்கிறார். கடந்த ஜனவரியில் துபாயில் நடைபெற்ற 24H ரேஸில் அஜித்குமார் ரேஸிங் அணி, 922 போர்ஷே பிரிவில் மூன்றாம் இடத்தைப் பிடித்து சாதனை படைத்தது.

அந்த வெற்றியைத் தொடர்ந்து, கடந்த மாதம் இத்தாலியில் நடந்த 12H முகெல்லோ சாம்பியன்ஷிப்பில் அஜித்குமார் ரேஸிங் அணி மூன்றாம் இடத்தைப் பிடித்தது. இந்த வெற்றிகளைத் தொடர்ந்து ஏப்ரல் 20 பெல்ஜியம் ஸ்பா ஃபிரான்கோர்சாம்ஸ் கார் ரேஸில் இரண்டாம் இடம் பிடித்து சாதனை படைத்திருக்கிறது.

இந்த நிலையில், "ரேஸிங் முதல் வெற்றிவரை உங்களின் ஆதரவின்றி இதைச் செய்திருக்க முடியாது. ஸ்பா ஃபிரான் கோர்சாம்ஸ் ரேஸில் இரண்டாம் இடம். இதைச் சாத்தியமாக்கிய அனைவருக்கும் மனமார்ந்த நன்றி" என்று அஜித்குமார் நன்றி தெரிவித்திருக்கிறார்.

## இலங்கை அகதிகளுக்கு குடியுரிமை கிடைக்க வேண்டும் - சசிகுமார்



அறிமுக இயக்குநர் அபிஷன் ஜீவிந்த் இயக்கத்தில் உருவாகியுள்ள திரைப்படம் "டூரிஸ்ட் ஃபேமிலி". குடும்பத் தலைவனாக சசிகுமார் நடிக்க, சிம்ரன், மிதுன் ஜெய் சங்கர் மற்றும் யோகி பாபு, கமலேஷ், எம். எஸ்.பாஸ்கர், ரமேஷ் திலக், பகவதி பெருமாள் உள்ளிட்ட பலர் நடித்திருக்கின்றனர். ஷான் ரோல்டன் இப்படத்திற்கு இசையமைத்திருக்கிறார். மே 1ஆம் திகதி இப்படம் திரைக்கு வருகிறது. இலங்கையில் ஏற்பட்ட பொருளாதார வீழ்ச்சியைச் சமாளிக்க முடியாமல் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இலங்கையின் வல்வெட்டித்துறையிலிருந்து சென்னையில் குடியேறுகிறது ஈழத்தமிழர்கள் குடும்பம். அந்த ஏரியாவே விரும்பும் ஓர் குடும்பமாக எப்படி மாறுகிறோம் என்பதுதான் கதை.

ஈழத்தமிழர்கள் குடும்பம் இலங்கையிலிருந்து வந்து சென்னையில் எப்படி வலிகளை மறைத்து, சந்தோஷமாக வாழ்கிறார்கள் என்பதுதான் கதை. உலகத்தில் இருக்கும் எல்லா ஈழத்தமிழர்களுக்கும் இப்படத்தைப் பார்த்து ஆங்கிலம் கற்றுக் கொள்ளும் அதேநேரம் நம் குழந்தைகள் நம் தாய்மொழித் தமிழைக் கற்றுக்கொள்ள வேண்டும் என்ற எண்ணம் தோன்றும். ஜாலியாக, காமடியாக நிறைய நல்ல விடயங்களைப் பற்றி பேசுகிறது இப்படம். அன்பைப் போதிக்கிறது இப்படம். சிரித்துக் கொண்டே, கருத்துள்ள இந்த நல்ல படத்தைப் பாருங்கள்.

இலங்கையிலிருந்து இங்கு வந்து அகதிகளாக வாழும் ஈழத்தமிழர்களுக்கு குடியுரிமை வழங்குவதில் நிறைய சிக்கல்கள் இருக்கின்றன. அவர்கள் நம் மக்கள், நம் நாட்டில் அகதிகளாக இருக்கும் அவர்களுக்கு குடியுரிமை வழங்க அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். இப்படத்தில் அதையும் பேசியிருக்கிறோம். இப்படத்தைப் பார்த்த பிறகு அரசு முன்வந்து அவர்களுக்குக் குடியுரிமை வழங்கினால் அது மிகவும் சந்தோஷமாக இருக்கும். அதுவே இப்படத்தின் வெற்றியாகவும் இருக்கும் என்று பேசியிருக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதல் பந்திலேயே சிக்சர் அசத்தும் அசாத்திய சிறுவன்



தன்னுடைய 14 வயது 23 நாட்களில் ராஜஸ்தான் ராயல்ஸ் அணிக்காக களமிறங்கியிருக்கிறார் வைபவ் சூர்யவன்ஷி. அவர் இந்த அணிக்குள் வந்தது எப்படி எனப் பார்ப்போம். ஐ.பி.எல் தொடங்கப் பட்ட நாள்முதல் இன்றுவரை கடந்த 17 சீசன்களில் இதுவரை யாரும் பெறாத சிறப்பை பீகாரைச் சேர்ந்த 13 வயது வைபவ் சூர்யவன்ஷி சில மாதங் களுக்கு முன் நடந்த ஐ.பி.எல் ஏலத்தில் பெற் றிருக்கிறார்.

தனது 9 வயதி லேயே கிரிக்கெட் அக்க டமியில் சேர்ந்து முறை யாகப் பயிற்சி பெறத் தொடங்கிய இவர், 12 வயதில் தனது சொந்த மாநிலத்துக்காக வினு மங்கட் டிராபியில் களமி றங்கி 5 ஆட்டங்களில் 400 ரன்கள் அடித்தது, தொடர்ந்து ராஞ்சியில் பீகாருக்காகக் களமிறங்கியது என அசத்தினார்.

பின்னர், கடந்த செப்டம்பரில், சென்னையில் நடைபெற்ற ஆஸ்திரேலியா **U19** அணிக்கெதிரான இளையோர் டெஸ் டில் 58 பந்துகளில் சதம் அடித்ததன் மூலம், இளையோர் டெஸ்டில் இந்தியரின் அதிவேக சதம் என்ற சாதனை படை த்து கவனம் ஈர்த்த வைபவ் சூர்யவன்ஷி, இந்தாண்டு ஐ.பி. எல் ஏலத்தில் தனது பெயரைப் பதிவு செய்தார்.

அதைத்தொடர்ந்து, **BCCI**இன் இறுதிப் பட்டியலில், 491ஆவது வீரராக ரூ.30 இலட்சம் அடிப்படை விலைக்குப் பட்டியலிடப்பட்ட வைபவ் சூர்யவன்ஷியை, ராஜஸ்தான் அணி ரூ.1.10 கோடிக்கு ஏலம் எடுத்தது. இதன்மூலம், ஐ.பி. எல்லில் மிக இளம் வயதில் ஏலம் போன வீரர் என்ற தனிச் சிறப்பைப் பெற்றிருக்கும் இவர், ராஜஸ்தானின் பிளேயிங் லெவனில் இடம்பெற்றுக் களமிறங்கியதால், மிக இளம் வயதில் ஐ.பி.எல் ஆடிய வீரர் என்ற சாதனையையும் படைத்திருக்கிறார்.


ஏலத்தில் இடம்பெற்று பாராட்டுகளை அவர் பெற்று வந்த சமயத்தில், **“அவருக்கு 13 வயது அல்ல 15 வயது”** என வயது மோசடி செய்ததாகக் குற்றச்சாட்டுகளும் வந் தன. இந்த நிலையில், அத்தகைய பேச்சுகளுக்கு அவரின் தந்தை சஞ்சீவ் விளக்கமளித்திருந்தார்.

இதுகுறித்து தனியார் ஊடகத்திடம் பேசிய சஞ்சீவ், “வைபவ் இப்போது என்னுடைய மகன் மட்டுமல்ல, ஒட்டுமொத்த பீகாரின் மகன். இதற்காக வைபவ் கடுமை யாக உழைத்திருக்கிறான். என்னுடைய நிலத்தைக்கூட விற்றுவிட்டேன். அதனால், இன்னும் நிதிச் சிக்கல்களை எதிர்கொள்கிறேன்.

வைபவ் தனது எட்டரை வயதிலேயே இந்தியா கிரிக் கெட் வாரியத்தின் எலும்பு சோதனையில் பங்கேற்றான். அதன்பின்னர், 19 வயதுக்குட்பட்ட இந்திய அணியிலும் விளையாடியிருக்கிறான். எனவே நாங்கள் யாருக்கும் பயப்பட மாட்டோம். வைபவை மீண்டும் ஒருமுறை கூட வயது சோதனைக்கு உட்படுத்தலாம்.” என்று கூறினார். அந்த தந்தையின் கனவு இன்று நிறைவேறியிருக்கிறது.

வைபவ் சூர்யவன்ஷி தற்போது ஐ.பி.எல்லில் களமி றங்கிய முதல் பாலே சிக்சருடன் தொடங்கியிருக்கிறார்.

**வாழ்த்துகள் வைபவ் சூர்யவன்ஷி**



# ஆச்சி அறிவுரை



## வறுமை கொடுமையானது

மாவை.நா.கஜேந்திரன்

### பேராண்டி...

அண்மையில ஒரு காணொளியைப் பார்த்தன். என்னை அறியாம லேயே கண்களிலிருந்து கண்ணீர் பொல பொல வெண்டு வந்திட் டுது. பார்த்து ஒருவாரம் ஆகிவிட்டுது ஆனாலும் அந்த காணொளியின்ர தாக்கம் என்ர மனசில இருக்கவே செய்யுது.

5ஆம் ஆண்டு வகுப்பறையில், ரீச்சர் பாடம் நடத்திக் கொண்டிருக்கிறார். 12 மணி பெல் அடிச்சதும் பிள்ளைகள் எல்லோரும் சாப்பிடுங்கோ எண்டு சொல்லிட்டு தானும் சாப்பிட தயாராகிறார் ரீச்சர்.

மாணவர்கள் ஆவலுடன் தமது சாப்பாட்டுப் பெட்டியை எடுத்து மேசையில வைக்கிறார்கள். குறித்த ஒரு மாணவன் தனது சாப்பாட்டுப் பெட்டியை எடுத்து அதை திறந்து பார்க்கிறான். அதனுள் உணவு எதுவும் இல்லை. மெதுவாக அதை மூடிவிட்டு.

ஆசிரியரிடம் மலசலகூடம் செல்ல அனுமதி கேட்டு வெளியே செல்கிறான். வெளியில் இருந்த தண்ணீர்ப் பைப்பில் தண்ணீரைக் குடித்துவிட்டு சற்றுத் தாமதமாக வகுப்பிற்க்குள் வருகிறான்.

வந்து தனது கதிரையில் அமர்ந்தவன், தனது சாப்பாட்டுப் பெட்டியை எடுத்து தனது பையில் வைப்பதற்கு முயற்சிக்கிறான்

உணவு எதுவும் இல்லாத அந்த சாப்பாட்டுப் பெட்டி பாரமாக இருப்பதை உணர்கிறான். ஆச்சரியத்துடன் அதை மெதுவாகத் திறந்து பார்க்கிறான்.

அதில் சப்பாத்தி, அப்பிள் துண்டுகள், திராட்சைப்பழங்கள், சீஸ் என்பன நிறைந்திருந்தன.

அவன் அருகில் உள்ள மாணவனை பார்க்கிறான். அப்போது அந்த மாணவன் அவன் தோளைத் தட்டியபடி சிரிக்கிறான். அந்த மாணவன் மகிழ்வாய் உணவை உண்கிறான். அந்த வகுப்பறையில் உள்ள அத்தனை மாணவர்களின் முகங்களிலும் மகிழ்ச்சி பெருகி வழிகிறது.

அத்தோடு அந்தக் காணொளி முடிகிறது பேராண்டி.

இதைப் பார்த்த போது **“தனி ஒரு மனிதனுக்கு உணவில்லை எனின் ஜகத்தினை அழித்திடுவோம்”** என்ற மகாகவி பாராதியாரின் கவிதையே நினைவுக்கு வந்தது.

பேராண்டி வறுமை எண்டுறது மிகக் கொடுமையானது. அதிலும் இளமையிலே வறுமை எண்டுறது மிக மிகக் கொடுமையானது.

எத்தின வீட்டில இப்பவும் பிள்ளைகள் காலைச் சாப்பாடு சாப்பிடாமல் பள்ளிக்கூடம் போகுதுகள் எண்டு உனக்குத் தெரியுமோ?.


படிக்கிறது முக்கியம். பசி தீருறது அதவிட முக்கியம். பசி எடுத்து சாப்பிட ஒரு நிமிடம் பிந்திப்போனா வயிறு என்ன பாடுபடும். ஆனால் சாப்பிடச் சாப்பாடு இல்லாமல் பசி கிடக்கிற பிள்ளைகளை எப்போதாவது நினைச்சுப் பார்த் திருக்கிறியோ?

இல்லாதவர்களுக்குக் கொடுக்கவேணும். பக்கத்து வீட்டுப் பிள்ளை பசி கிடக்க, நாங்கள் பசியாற சாப்பிடுறது கொடுமையிலும் கொடுமை பேராண்டி.

அந்த காணொளியைப் பார்த்ததில இருந்து எனக்கு உன்ர நினைப்பாயே இருந்தது.


அதை உன்னட்டச் சொன்னால் மனம் ஆறுதலா இருக்கும்மெண்டுதான் உனக்கு சொன்னன் பேராண்டி.

**ஆச்சி வருவா...**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குதிக்கால் வலி... காரணம் ஆயிரம்!



"அட, உனக்குமா? எனக்கும் அதே பிரச்சினைதான்" என்ற புலம்பல் லிஸ்ட்டில் உடற்பருமன், முதுகு வலி, களைப்பு போன்றவற்றுக்குப் போட்டியாக குதிகால் வலியும் இன்று சேர்ந்திருக்கிறது. அளவுக்கதிக உடல்பருமன் கொண்டவர்கள், வயதானவர்களை பாதித்துக் கொண்டிருந்த குதிக்கால் வலி,

காலையில் கண்விழித்ததும் கால்களைத் தரையில் ஊன்றினால் உயிர்போகும் அளவுக்கு வலிக்கும். வலியோடு சில அடிகள் நடந்த பிறகு மெல்ல மெல்ல குறையும். மீண்டும் எப்போது வலி வரும் என்று ஊகிக்க முடியாது.

"அது பாட்டுக்கு தானா வந்துட்டு, தானா சரியாயிடும்" என்பதில் தொடங்கி, "கால் வலி செருப்பு போட்டாலே சரியாயிடும்", என்பது ஆளாளுக்கு அட்வைஸ் சொல்வார்கள்.

"கால் வலி என்றாலே செருப்பை மாற்றினால் போதும் என்ற அளவுக்கு மட்டுமே இருந்த விழிப்புணர்வு, இன்று அந்த வலியை கவனிக்க வேண்டும், சிகிச்சை எடுக்க வேண்டும், வராமல் தடுக்க வேண்டும் என்ற அளவுக்கு வளர்ந்திருப்பது ஒரு காரணம். இது மட்டுமே இதில் பாசிட்டிவ்வான விடயம்.

உடற்பருமன் நாளுக்கு நாள் உச்சத்துக்குப் போய்க் கொண்டிருப்பதும் குதிக்கால் வலி உட்பட பல பிரச்சினைகளுக்கு முக்கிய காரணமாக இருக்கிறது.

இன்னொரு பக்கம் ஆரோக்கியத்தின் மீதான அதீத அக்கறையால் அளவுக்கதிகமாக உடற்பயிற்சி செய்கிறார்கள் சிலர். பாதங்களுக்கு அதிக வேலை கொடுப்பதும் இளவயதில் குதிகால் வலியை ஏற்படுத்தும்.

குழந்தைகளால் வேகமாக நடக்க முடியாமலோ, ஓட முடியாமலோ, விளையாட முடியாமலோ இருக்கலாம், மந்தமாக இருக்கலாம். அதைக் களைப்பு என்று மட்டும் புரிந்துகொண்டு பல பெற்றோர்களும் ஹெல்த் ரிங் தருவது, டானிக் தருவது போன்றவற்றில் கவனம் செலுத்துகிறார்கள். ஆனால், குழந்தைகளின் தட்டைப் பாதங்கள்தான் மூல காரணமாக இருக்கும்.

குழந்தைப் பருவத்தில் இதை அலட்சியம் செய்வதால், இளவயதில் குதிக்கால் வலி தீவிரமடைகிறது. ஃபேஷன் என்ற பெயரில் பொருத்தமற்ற காலணிகளை அணிவதை இளைஞர்களிடம் அதிகம் பார்க்கிறோம். அதுவும் குதிக்கால் வலியை வரவழைக்கலாம்.

குதிக்கால் வலிக்கு முக்கிய காரணம் "பிளான்ட்டார் ஃபேஷியைட்டிஸ்" பாதத்தின் அடிப்பகுதியில் குதிக்கால் எலும்பிலிருந்து கால் விரல்கள் வரை செல்லும் தடிமனான தசை நாணான பிளான்ட்டார் ஃபேஷியா வீக்கமடையும் போது குதிக்கால் வலி ஏற்படுகிறது. சில நேரங்களில் குதிக்கால் எலும்பின் கீழ் அல்லது பின்புறத்தில் கல்சியம் படிந்து முள் போன்ற வளர்ச்சி ஏற்படும். இதுவும் வலிக்கான காரணமாகலாம்.


காருக்கு டயர்கள் எவ்வளவு முக்கியமோ, அந்த அளவுக்கு மனிதர்களுக்கு கால்கள் முக்கியம். என்னதான் ஹாஸ்லியான காராக இருந்தாலும் டயர்கள் சரியான அலைன்மென்ட்டில் இருந்தால்தான் கார் சரியாக ஓடும்.

அதுபோல பாதங்களின் அமைப்பு சரியாக இருந்தால்தான் உடலியக்கம் சரியாக இருக்கும். கால்களின் வளைவுத் தன்மை நோர்மலாக இருக்கிறதா, இயல்பைவிட அதிகமாகவோ, குறைவாகவோ இருக்கிறதா என்று பார்க்க வேண்டும். அதை வைத்துத்தான் கால்களில் எங்கே வலி வருகிறது என்பதைக் கண்டுபிடிக்க முடியும்.

# அனுபவங்கள் ஆயிரம்!




சிங்கப்பூரில் ஆஞ்சிலா யோஹ் என்ற பெண் ஊழியர் ஒருவர் ரிஷ்யூ பேப்பரில் தனது இராஜினாமா கடிதத்தைக் கொடுத்து நிறுவனத்தை அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளார். "தேவைப்படும்போது பயன்படுத்தப்பட்டு, தூக்கியெறியப்பட்டேன். நிறுவனம் என்னை எவ்வாறு நடத்தியது என்பதற்கு இந்த ரிஷ்யூ பேப்பர் ஒரு குறியீடு!" என அதில் குறிப்பிட்டிருந்தார். **செம தில் லேடி!**




சிலி நாட்டைச் சேர்ந்த ஹினோஜோசா, தன் வீட்டைச் சுத்தம் செய்யும்போது தந்தையின் 62 ஆண்டுகள் பழைய வங்கிக் கணக்குப் புத்தகத்தைக் கண்டெடுத்தார். 1960-70களில் வீடு வாங்குவதற்காக ரூ.1.4 இலட்சத்தை வங்கியில் டெபாசிட் செய்துவிட்டு தந்தை மறைந்துவிட்டார். குடும்பத்தினருக்கும் இது தெரியவில்லை.

அந்த வங்கியும் மூடப்பட்டுவிட்டது. பாஸ்புக்கில் **'State Guarantee'** என்ற வார்த்தைகள் இருந்ததால் மனம் தளராமல் நீதிமன்றத்தை நாடினார் ஹினோஜோசா. நீதிமன்ற உத்தரவுக்குப் பிறகு, சுமார் ரூ.9 கோடி பணத்தை அவருக்கு அரசு கொடுத்திருக்கிறது.

**லக்கி மேன்!**



## சமைப்போம் சுவைப்போம்

## கொள்ளு சுரைக்காய் கஞ்சி



**தேவையானவை :**

1. கொள்ளு – கால் கிலோ
2. கைக்குத்தல் அரிசி அல்லது சிவப்பரிசி 100 கிராம்
3. பார்லி – கால் கிலோ
4. சுரைக்காய் – 200 கிராம்
5. சீரகம் – ஒரு தேக்கரண்டி
6. உப்பு – தேவைக்கேற்ப

**செய்முறை**

கொள்ளு, பார்லி, அரிசி மூன்றையும் தனித்தனியாக வறுத்து பொடி செய்து கொள்ளவும். அத்துடன் சீரகம் சேர்த்து போத்தலில் வைத்துக்கொள்ளலாம். தேவைப்படும்போது சுரைக்காயைப் பொடியாக நறுக்கி வேகவைத்து, 3 தேக்கரண்டி அரைத்து வைத்த பொடியைச் சேர்த்து, உப்புப் போட்டு கஞ்சி செய்து கொள்ளலாம். காலை உணவுக்குப் பதில் இந்தக் கஞ்சியை எடுத்துக்கொண்டால் பருமன் குறையும்.

**கொள்ளுவில் உடலுக்குத் தேவையான இரும்பு, பொட்டாசியம் ஆகிய கனிமங்கள் நிறைந்திருக்கின்றன.**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உலகம் தேடும் சாதனைப் பெண்




இன்று உலகத்தையே ஆட்டிப்படைப் பவை தொழில்நுட்ப நிறுவனங்கள்தான். அத்தகைய தொழில்நுட்பங்களை இயக்கும் அறிவாளி மூளைகளுக்கு எப்போதுமே சிவப்புக் கம்பளம் விரிக்கக் காத்திருக்கின்றன. உலகப் புகழ் நிறுவனங்கள். அப்படியான தொழில்நுட்ப நிறுவனங்கள் போட்டி போட்டுக்கொண்டு தேடும் ஒரு பெண் தலைமையை பற்றித்தான் இந்தக் கட்டுரையில் பார்க்க இருக்கிறோம்.



அவர் வேறு யாருமல்ல கூகுள். ஃபேஸ்புக். உலக வங்கி ஆகியவற்றின் உயர் பதவிகளில் வலம் வந்த ஷெரில் சாண்ட்பெர்க்தான்.

இவர் அமெரிக்காவின் வோஷிங்டன் டி.சி யில் 1969 ஆகஸ்ட் 28ஆம் திகதி பிறந்தார். இவரின் தந்தை ஜோயல் சாண்ட்பெர்க். கண் அறுவை சிகிச்சை மருத்துவர். தாய் அடெல், பிரெஞ்ச் மொழி பேராசிரியர். ஷெரிலுக்கு இரண்டு வயது இருக்கும்போது குடும்பம் வடக்கு மயாமிக்கு இடம்பெயர்ந்தது. அங்கு பள்ளிப் படிப்பை முடித்தவர். அடுத்து ஹார்வர்டு கல்லூரியில் பொருளாதாரப் பிரிவில் இளங்கலைப் பட்டப் படிப்பில் சேர்ந்தார்.

படிப்பில் கெட்டிக்காரரான இவர். பொருளாதாரத்தில் சிறந்த மாணவர் என்ற விருதையும் பெற்றார். பின்னர் இவருக்கு பேராசிரியர் லாரன்ஸ் சம்மர்ஸின் அறிமுகம் கிடைக்க, உலக வங்கியில் தன்னுடைய ஆராய்ச்சிகளுக்கு உதவியாளராக ஷெரில் சாண்ட் பெர்கை தேர்வு செய்தார். அந்த வாய்ப்புதான் அவருடைய மொத்த வளர்ச்சிக்கும் அடித்தளமாக அமைந்தது.

தொடர்ந்து ஹார்வர்டு பிசினஸ் பாடசாலையில் சேர்ந்து எம்.பி.ஏ பட்டத்தை முடித்தார். அவருடைய திறமைக்கு உடனே மெக்கன்சி அண்ட் கம்பெனியில் மேனேஜ்மென்ட் கன்சல்டன்டாக வேலை கிடைத்தது.

2001இல் கூகுளில் அடியெடுத்து வைத்தார். கூகுள் நிறுவனத்தில் அட்வர்டைசிங் மற்றும் பப்ளிஷிங் புராடக்டுகளின் ஆன்லைன் விற்பனைக்கு இவர்தான் தலைமை வகித்தார். அப்போது கூகுளின் விற்பனைப் பிரிவில் 4 பேர் மட்டுமே பணியாற்றினர். அந்த எண்ணிக்கையை 4,000 ஆக உயர்த்திய பெருமை இவரையே சேரும். அந்த அளவுக்கு கூகுள் நிறுவனத்தின் விற்பனையை வளர்த்தெடுத்தவர் ஷெரில்.

இந்த நிலையில் 2007இல் ஒரு கிறிஸ்துமஸ் கொண்டாட்ட நிகழ்வில் ஷெரில் சாண்ட் பெர்க்கை பார்த்த ஃபேஸ்புக் நிறுவனர் மார்க் சக்கர்பர்க், “என் நிறுவனத்தில் சேர்ந்துவிடுங்களேன்” என்று விளையாட்டாகக் கேட்க, ஷெரிலும் “பார்க்கலாம்” என்று கூறியிருக்கிறார். அதுவரை ஃபேஸ்புக் நிறுவனத்தில் சீஃப் ஆபரேட்டிங் ஆபீசர் என்று யாரும் இல்லாத நிலையில், அந்தப் பொறுப்புக்கு ஷெரில்தான் சரியானவர் என்று அவருக்கு அந்தப் பதவி வழங்கப்பட்டது. 2008இல் கூகுள் நிறுவனத்திலிருந்து விலகி ஃபேஸ்புக்கில் சேர்ந்தார். அவர் நிறுவனத்துக்குள் வரும் வரை ஃபேஸ்புக் வெறும் பொழுதுபோக்கு தளமாக மட்டுமே இருந்தது.

ஷெரில் வந்த பிறகு ஃபேஸ்புக் வேறு ஒரு வடிவம் பெற்றது. ஃபேஸ்புக்கின் செயற்பாடுகள் அனைத்திலிருந்தும் எப்படி வருவாய் ஈட்டுவது என்பதைத் தேடித் தேடிச் செயற்படுத்தி நிறுவனத்தை இலாபகரமான நிறுவனமாக மாற்றினார் ஷெரில்.

ஃபேஸ்புக் நிறுவனத்தின் விற்பனை, மார்க்கெட்டிங், பிசினஸ் டெவலப்மென்ட், மனிதவளம், பப்ளிக் பாலிசி மற்றும் கம்யூனிகேஷன் வரை அனைத்தையும் இவர் ஒரே ஆளாக நிர்வகித்தார். 2012இல் நிறுவனத்தின் இயக்குநர் குழுவிலும் உறுப்பினர் ஆனார். 2014இல் ஃபேஸ்புக் ஐபிஓ வெளியிட்டபோது ஷெரில் வசம் 41 மில்லியன் பங்குகள் இருந்தன.

மெட்டா நிறுவனம் உதயமான பிறகு அதிலும் சி.ஓ.ஓ வாக இருந்தார். 2022 வரை அந்தப் பதவியில் நீடித்தவர், அதன்பிறகு பதவி விலகினார்.

பெண்கள் முன்னேற்றத்துக்காகத் தொடர்ந்து குரல் கொடுத்துவந்த இவர் பெண்களுக்காக ஒரு தொண்டு அமைப்பையும் தொடங்கி நடத்தி வருகிறார். இவர் ஓர் எழுத்தாளரும்கூட.

“Lean In: Women, Work, & the Will to Lead”, “Lean In for Graduates” ஆகிய புத்தகங்களையும் எழுதியுள்ளார். 2024இல் நிறுவனத்தின் இயக்குநர் குழுவிலிருந்து விலகினார். ஆனாலும், நிறுவனத்தின் ஆலோசகராகத் தொடர்ந்து இருக்கிறார்.

இவருடைய தற்போதைய சொத்து மதிப்பு (2.3 பில்லியன் டாலர்கள்) ரூ.20,000 கோடி. அமெரிக்காவின் செல்ஃப்மேடு பெண் பணக்காரர்களில் 16ஆம் இடத்தில் உள்ளார்.

# தெளிவே என் சிந்தனையுள்... 7

இந்தியாவின் ஜம்மு - காஷ்மீரில் கடந்த 22ஆம் திகதி பயங்கரவாதிகள் பொதுமக்கள் மீது நடத்திய துப்பாக் கிச்சூட்டில் வெளிநாட்டவர்கள் உட்பட 26 அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப் பட்டிருக்கிறார்கள்.

இதில் திருமணம் முடிந்த வெறும் நான்கே நாட்களான இந்திய கடற்படையைச் சேர்ந்த 26 வயதுடைய ஒருவரும் இறந்திருக்கிறார். தேன்நிலவுக்காக காஷ்மீர் சென்ற நிலையிலேயே மேற் குறித்த பரிதாபச் சம்பவம் நடந்திருக்கிறது.

இறந்த தனது கணவரின் உடலின் அருகே மனைவி விரக்தியுடன் இருக்கும் புகைப்படங்கள் இணையத் தளத்தில் வைரலாகி வருகிறது.

என் வாழ்நாளில் மொத்தமும் உன்னுடன் என்ற உறுதிமொழியுடன் திருமணம் முடித்த பெண்ணின் மன நிலையை எண்ணிப்பார்க்கும் போது மனம் ஏதோ கலங்கி விடுகிறது.

குறித்த துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தில் உயிர் பிழைத்த பெண் ஒருவர் கூறிய விடயங்கள் அதிர்வூட்டுவனவாக இருந்தன.

உல்லாச பயணிகள் குழுமியிருந்த இடத்திற்கு வந்த துப்பாக்கிதாரிகள் **“நீ என்ன மதம்”** என்று கேட்ட பின்னரே துப்பாக்கிச்சூட்டை நடத்தியதாக கூறியிருந்தார்.

**அன்பானவர்களே!** மதம் என்பது மனிதனை மனிதனாக வாழ வைக் கும் ஒரு கருவியே தவிர, மனிதனை மிருக மாக்கும் விசையல்ல.

இப்போது எமது பிரதேசங்களிலும் இனத்தால் மதத்தால் பிளவுற்று, முரண் பட்டுக் கிடக்கின்றோம்.

ஒரு சிறு புரிந்துணர்வு அனைத்திற் கும் தீர்வாகும்.

மதங்கள் அனைத்தும் அன்பை மாத்திரமே போதிக்கின்றன. ஆனால் மனிதர்களாகிய நாம்தான் அன்பை வெறுத்து வன்மத்தை கையிலெடுக்கின்றோம்.

இந்த உலகில் எத்தனையோ மதங்கள் உண்டு. அத்தனையும் இறைவனை அண்ணார்ந்து விண்ணிலேயே தேடிக் கொள்கின்றன எனின்: மதங்களினூடே நாம் பிரிவுகளை வைத்திருக்கின்றோமே தவிர இறைவன்என்பவன் ஒருவன்.

அவன் அன்பினால் உருவானவன் என்பதை முடிவாக்கிக் கொள்ளலாம்.



குருஜி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலத்தால் அழியாத கானங்கள்

படம் : சூரியகாந்தி
இசை : MS விஸ்வநாதன்
பாடியவர் : TM சௌந்தர்ராஜன்
பாடல் வரிகள் : கண்ணதாசன்



பரமசிவன் கழுத்தில் இருந்து பாம்பு கேட்டது
கருடா சௌக்கியமா
பரமசிவன் கழுத்தில் இருந்து பாம்பு கேட்டது
கருடா சௌக்கியமா
யாரும் இருக்கும் இடத்தில் இருந்து கொண்டால்
எல்லாம் சௌக்கியமே.. கருடன் சொன்னது..
அதில் அர்த்தம் உள்ளது..

உயர்ந்த இடத்தில் இருக்கும் போது
உலகம் உன்னை மதிக்கும்
உன் நிலைமை கொஞ்சம் இறங்கி வந்தால்
நிழலும் கூட மிதிக்கும்
உயர்ந்த இடத்தில் இருக்கும் போது
உலகம் உன்னை மதிக்கும்
உன் நிலைமை கொஞ்சம் இறங்கி வந்தால்
நிழலும் கூட மிதிக்கும்
மதியாதார் தலைவாசல் மிதிக்காதே என்று
மானமுள்ள மனிதனுக்கு ஔவை சொன்னது
அது ஔவை சொன்னது.. அதில் அர்த்தம் உள்ளது

பரமசிவன் கழுத்தில் இருந்து பாம்பு கேட்டது
கருடா சௌக்கியமா....

வண்டி ஓட சக்கரங்கள் இரண்டு மட்டும் வேண்டும்
அந்த இரண்டில் ஒன்று சிறியதென்றால்
எந்த வண்டி ஓடும்
உனை போலே அளவோடு உறவாட வேண்டும்
உயர்ந்தோரும் தாழ்ந்தோரும் உறவு கொள்வது
அது சிறுமை என்பது.. அதில் அர்த்தம் உள்ளது


பரமசிவன் கழுத்தில் இருந்து பாம்பு கேட்டது
கருடா சௌக்கியமா....

நீயும் நானும் சேர்ந்திருந்தோம் நிலவு வானம் போலே
நான் நிலவு போல தேய்ந்து வந்தேன் நீ வளர்ந்ததாலே
நீயும் நானும் சேர்ந்திருந்தோம் நிலவு வானம் போலே
நான் நிலவு போல தேய்ந்து வந்தேன் நீ வளர்ந்ததாலே
என் உள்ளம் எனை பார்த்து கேலி செய்யும் போது
இல்லாதான் இல்வாழ்வில் நிம்மதி ஏது
இது கணவன் சொன்னது.. இதில் அர்த்தம் உள்ளது

பரமசிவன் கழுத்தில் இருந்து பாம்பு கேட்டது
கருடா சௌக்கியமா
பரமசிவன் கழுத்தில் இருந்து பாம்பு கேட்டது
கருடா சௌக்கியமா
யாரும் இருக்கும் இடத்தில் இருந்து கொண்டால்
எல்லாம் சௌக்கியமே.. கருடன் சொன்னது..
அதில் அர்த்தம் உள்ளது..

# மணமாலை வாடமுன்னே பிணமான கணவன்





ஜம்மு-காஷ்மீரின் பஹல்காமில் அண்மையில் தீவிரவாதிகள் நடத்திய துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் நாட்டையே உலுக்கியிருக்கிறது. சுற்றுலாப் பயணிகள் மீது நடத்தப்பட்ட இந்தத் திடீர் துப்பாக்கிச் சூட்டில் இதுவரை வெளிநாட்டினர் 2 பேர் உள்ளிட்ட 26 சுற்றுலாப் பயணிகள் உயிரிழந்திருப்பதாகவும், காயமடைந்தவர்கள் சிகிச்சை பெற்று வருவதாகவும் தகவல்கள் வெளியாகியிருக்கின்றன.


கடந்த ஏப்ரல் 16 ஆம் திகதி திருமணத்தை முடித்து மனைவியுடன் சுற்றுலா சென்ற இந்தியக் கடற்படை அதிகாரி லெப்டினன்ட் வினய் நர்வால் தீவிரவாதிகளின் துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்தார். திருமணமான 4 நாட்களில் கணவனை இழந்த அவரது மனைவி சம்பவ இடத்திலேயே அவரது உடலை மடியில் வைத்துக் கதறி அழுத புகைப்படங்கள் பார்ப்பவர்களைச் சோகத்தில் ஆழ்த்தியது.

கணவரின் உடலுக்கு இறுதி மாரியாதை செய்த லெப்டினன்ட் வினய் நர்வாலின் மனைவி ஹிமான்ஷி நர்வால், "என் வாழ்வில் நான் பார்த்த சிறந்த மனிதர் நீங்கள்தான். அவரது ஆன்மா சாந்தியடையட்டும். அவர் ஒரு நல்ல வாழ்க்கையை வாழ்ந்திருக்கிறார். இந்த உலகம் பாதுகாப்பாக இருக்க அவரும் காரணமாக இருந்திருக்கிறார். நாம் அனைவரும் அவரைப் பற்றி எல்லா வகையிலும் பெருமைப்பட வேண்டும்" என்று கண்ணீருடன் கணவரின் உடலுக்கு மரியாதை செய்தார்.

அவரது குடும்பத்தினர், "அரசாங்கம் இப்படி கொடூரத்தாக்குதல் நடத்துபவர்களுக்குக் கடுமையான தண்டனை வழங்கி, பயங்கரவாதத்தை முடிவுக்குக் கொண்டுவர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்" என்று ஆதங்கத்துடன் அரசுக்கு வேண்டுகோள் வைத்தனர்.

லெப்டினன்ட் வினய் நர்வாலின் இறுதி அஞ்சலி, இதுதொடர்பான வீடியோ சமூக வலைதளங்களில் வைரலாகி வரும் நிலையில் லெப்டினன்ட் வினய் நர்வால் உயிரிழக்கும் முன்பு தாக்குதல் நடந்த இடத்தில் மனைவியுடன் மகிழ்ச்சியாக இருக்கும் வீடியோ வைரலாகிப் பார்ப்பவர்களை சோகத்தில் ஆழ்த்தி வருகிறது.

# குரலற்றவர்களின் குரலாக இருந்தவர்!



அர்ஜென்டினாவைச் சேர்ந்த 76 வயது ஜார்ஜ் மரியோ பெர்காக்லியோ என்ற எளிய மனிதர், 'போப் பிரான்சிஸ்' என்ற புனிதப் பெயரோடு 2013 மார்ச் 13ஆம் திகதி வாடிகன் புனித பீட்டர் சதுக்கத்துக்கு எதிரேயுள்ள பால்கனியில் வந்து கையசைத்த தருணம் இப்போதுதான் நிகழ்ந்ததுபோல இருக்கிறது. தன் 88 வயதில் தற்போது போப் பிரான்சிஸ் மறைந்திருக்கிறார்.

காலம் காலமாக இருக்கும் நடைமுறைகளை [illegible] வருகிறவர்களுக்கு எதிர்ப்புக் காத்திருக்கும். மத நிறுவனங்களில் அப்படிப்பட்ட எதிர்ப்புகள் இன்னும் கடுமையாக இருக்கும். தன் வாழ்நாள் முழுக்க அப்படிப்பட்ட எதிர்ப்புகளைச் சந்தித்து வந்தார் போப் பிரான்சிஸ்.

உலகின் 120 கோடி கத்தோலிக்க கிறிஸ்தவர்களுக்குத் தலைமை வகிப்பவர், அமெரிக்க ஜனாதிபதி உள்ளிட்ட சக்தி வாய்ந்த தலைவர்கள்கூட வந்து காத்திருந்து சந்திக்க விரும்புகிற புனிதமான பதவியை அலங்கரிப்பவர் என்கிற வகையில் ஒரு போப்புக்கு எல்லையற்ற அதிகாரங்கள் உண்டு. ஆனால் அந்த நாற்காலியில் எளிமையாக அமர்ந்திருந்தவர் பிரான்சிஸ்.

போப்புகளுக்கான ஆடம்பர அரண்மனையைத் தவிர்த்து, எளிமையான கெஸ்ட் ஹவுஸில் வசித்தவர். லிமோசின் காரைப் புறக்கணித்து ஒரு சாதாரண காரில் பயணம் செய்த எளிமைக்குச் சொந்தக்காரர். தான் போப்பாகப் பதவியேற்பதைக் காணும் பரவசத்தில் வாடிகனுக்குக் கிளம்பிய தன் சொந்த நாட்டு மக்களைத் தடுத்து, "பயணத்துக்குச் செலவாகும் பணத்தை ஏழைகள் நலனுக்குக் கொடுங்கள்" எனக் கேட்டுக்கொண்ட கருணையாளர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்சய திருதியை முன்னிட்டு எம்மிடம் கொள்வனவு செய்யும் தங்க நகைகளுக்கு
விசேட விலைக்கழிவுடன் ( குறைந்த அளவில் சேதாரம், செய்கூலியுடன் பெற்றுக்கொள்ளலாம்)
என்பதை எமது வாடிக்கையாளர்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம் மற்றும் எமது
அட்சய திருதியை அன்று குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்படும் 3 அதிஸ்ரசாலிகளுக்கு
தங்க நாணயம் வழங்கப்படுவதோடு மற்றும் பெறுமதிமிக்க பரிசில்களும் வழங்கப்படும்.

30.04.2025




எமது அன்பர்கள், ஆதரவாளர்கள்,
வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் வணக்கம்
எம்மால் மிக பிரமாண்டமாக அமைக்கப்பட்ட
புதிய ஸ்தாபனம்

AJY

Arana
Jewellery

செல்வம் பொங்கிடும்
அட்ஷய திருதியை
நல்வாழ்த்துக்கள்

மற்றும் பிந்திய
சித்திரைப்புத்தாண்டு
நல்வாழ்த்துக்கள்





(C-2818)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நித்திலம் தொகுத்து வழங்கும்'

# சுகமான விடியல்

447

வலம்புரியின் மருத்துவச்சுடர்

# நீரிழிவு நிலையில் பாதங்களைப் பராமரிப்பது எப்படி?


இன்றைய காலகட்டத்தில் பலருக்கு நீரிழிவின் தாக்கம் அதிகரித்து வருகிறது. குறிப்பாக எமது பிரதேசத்தில் பல இளைஞர் யுவதிகளும் இந்த நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர். இதற்கு மிக முக்கியமான காரணம், எமது வாழ்க்கை நடைமுறையில் ஏற்பட்டு வரும் மாற்றங்கள் ஆகும். ஒருவருக்கு நீரிழிவு நோய் ஏற்படும் போது, அதனால் பல்வேறு நீண்டகால பாதிப்புகள் ஏற்படுகின்றன. இது பெரிய குருதி குழாய்களில் ஏற்படும் பிரச்சினைகள் மற்றும் சிறிய குருதிக் குழாய்களில் ஏற்படும் பிரச்சினைகள் என இரண்டு வகைப்படும். பெரிய குருதிக் குழாய்களில் ஏற்படும் பிரச்சினைகளாக மாரடைப்பு, பாரிசவாதம் என்பவற்றைக் குறிப்பிடலாம். அதேபோல், சிறிய குருதிக் குழாய்களில் ஏற்படும் பிரச்சினைகளாக கண்களில் ஏற்படும் பாதிப்புகள் (கண் குருடாதல்), சிறுநீரகப் பாதிப்புகள் மற்றும் நரம்பு பாதிப்புகள் என்பவற்றைக் குறிப்பிடலாம். இது தவிர, நீரிழிவில் ஏற்படும் மிக முக்கியமான பாதிப்புகளில் ஒன்றாகக் காணப்படுவது பாதங்களில் ஏற்படும் பாதிப்பாகும். இதன் மூலம் அவயவங்களை இழக்க வேண்டிய நிலையும் ஏற்படலாம். எனவே, நீரிழிவு நோயாளர்கள் பாதப் பராமரிப்பு செய்ய வேண்டியது அவசியமாகும்.

எமது சமூகத்தில், நோயாளர்களிடையே இந்தப் பாத பராமரிப்பில் அக்கறை மிகவும் குறைவாக இருக்கிறது. உலகின் ஏதோ ஒரு மூலையில், 20 செக்கன்களுக்கு ஒருவர் தன்னுடைய கால்களை இழப்பதாக தரவுகள் குறிப்பிடுகின்றன. கட்டுப்பாடற்ற நீரிழிவு நோயினாலே இந்த நிலை ஏற்படுகின்றது. நீரிழிவு நோயாளர்கள் தமது கால்களை இழக்கும் நிலைக்கு மிக முக்கியமான காரணமாகக் காணப்படுவது, கால்களில் ஏற்படுகின்ற ஆறாத புண்கள் ஆகும். மிகச்சிறிய புண்களாக ஆரம்பித்து, அதனைக் கவனிக்காதவிடத்து கால்களை இழக்க வேண்டிய நிலை ஏற்படுகின்றது. இவ்வாறு பாதங்கள் அல்லது கால்கள் இழப்பதைத் தடுக்க என்ன செய்ய வேண்டும் என்று பார்த்தால், மிக முக்கியமாக நீரிழிவு நோயாளர் ஒருவர் தமது குருதியில் காணப்படும் குளுக்கோஸின் அளவை மிகவும் கவனமாக, கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்க வேண்டியது அவசியம். இதற்கு, கட்டுப்பாடான வாழ்க்கை நடைமுறை அவசியமாகும். ஆரோக்கியமான உணவுகளை உட்கொள்வதோடு, உடற்பயிற்சியிலும் ஈடுபட வேண்டும். அதோடு, வைத்தியர்களின் ஆலோசனைப்படி, கிரமமாக மருந்துகளை எடுத்துக் கொள்ள வேண்டும்.

நீரிழிவு நோயாளர்களுக்கு, நரம்புத் தொகுதியில் பாதிப்பு ஏற்படுவதால், அவர்களுக்கு உணர்ச்சி குறைவாகக் காணப்படும். அவர்களுக்குப் பாதங்களில் உணர்ச்சி குறைவாக இருப்பதால், பாதங்களில் கற்கள் குத்தும் போது கூட உணர்ச்சி இல்லாமல் இருக்கும். ஆகவே, இவ்வாறான நிலையில் கால்களில் சிறிய புண்கள் ஏற்பட்டு, அதனை கவனிக்காமல் விட, அது பெரிய புண்ணாக மாறி, இறுதியில் கால்களை இழக்க வேண்டிய நிலை ஏற்படுகின்றது.

அதேபோல், நீரிழிவு நோயாளர்களுக்கு காணப்படும் அடுத்த முக்கியமான பிரச்சினையாக, குருதி ஓட்டத்தில் ஏற்படும் பிரச்சினைகள் காணப்படுகின்றன. அதாவது, கால்களுக்குச் செல்லும் குருதி ஓட்டத்தில் காணப்படும் பிரச்சினை காரணமாகப் பல பாதிப்புகள் ஏற்படுகின்றன. அதேபோல், அவர்களுக்கு, Autonomic Nervous System எனப்படுகின்ற நரம்புத் தொகுதியில் பாதிப்பு ஏற்படுவதால், அவர்களுடைய கால்களிலிருந்து வியர்வை வெளியேறுவது குறைவாக காணப்படுகின்றது. அதோடு, கால்களில் Fungus infection என்ற தொற்றுக்கள் ஏற்படுவதற்கான சாத்தியக்கூறுகளும் அதிகமாகக் காணப்படுகின்றன. ஆகவே, நீரிழிவு நோயாளிகள் தமது கால்களில் சிறிய புண்கள் காணப்படும் போதே, வைத்திய ஆலோசனையைப் பெறுவது அவசியம். சில சந்தர்ப்பங்களில், அபாயகரமான பிரச்சினைகளும் ஏற்படலாம். நீரிழிவு நோயாளர்களுக்கு, கால்களில் புண்கள் ஏற்பட்டு அதனூடாக சீல் வெளியேறினால் அல்லது அவருக்கு காய்ச்சல் ஏற்பட்டால், கால்கள் சிவப்பு நிறமாக இருந்தால், வீக்கம் ஏற்பட்டால் அல்லது அதிகரித்த நோய் நிலைமை காணப்பட்டால், உடனடியாக வைத்திய ஆலோசனையைப் பெற வேண்டியது அவசியமாகும். நீரிழிவு நோயாளிகள் குறைந்தது, ஒரு வருடத்திற்கு ஒரு தடவையாவது பாதப் பரிசோதனைகளை மேற்கொள்வது அவசியமாகும். ஏனெனில், வைத்திய பரிசோதனைகள் மூலம், நீரிழிவு நோயாளி ஒருவரின் பாதம் எவ்வாறு இருக்கிறது என்பதை அறிந்து, அதற்கு ஏற்ற வகையில் சிகிச்சைகளை செய்து கொள்ள முடியும். இவ்வாறு வருடத்திற்கு ஒருமுறை செய்யப்படும் பரிசோதனையை Annual Screening என்று அழைப்பார்கள். இதன்மூலம் நீரிழிவு நோயாளிகளின் பாதங்களை Low risk, intermediate risk மற்றும் High risk என்று வகைப்படுத்தக் கூடியதாக இருக்கும். மிகக்கூடிய அபாய நிலையான High risk இருக்கும்போது, அவ்வாறான நோயாளர்களை மூன்று மாதங்களுக்கு ஒரு முறை, அவர்களுடைய பாதங்களைப் பரிசோதித்துக் கொள்ள வேண்டியது அவசியம்.

பாதப் பராமரிப்பிற்கு மேற்கூறியது போல நீரிழிவு நோயினைக் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்க வேண்டும். குறிப்பிட்ட காலத்திற்கு ஒரு முறை குருதிக் குளுக்கோஸ் பரிசோதனைகளை மேற்கொள்வது அவசியமாகும். நீரிழிவு நோய் கட்டுப்பாட்டிற்குள் இருக்கும் போது, அவர்களுக்கு நீண்டகால பாதிப்புகள் ஏற்படுவது குறைவாக இருக்கும். நீரிழிவு நோயாளிகள் தமது குருதிக் குளுக்கோஸை மாத்திரம் அல்லாது தமது குருதி அமுக்கம், குருதியிலுள்ள குளுக்கோஸின் அளவு மற்றும் ஏனைய நாட்பட்ட நோய்களையும் கட்டுப் பாட்டிற்குள் வைத்திருக்க வேண்டும். அதேபோல், குறிப்பிட்ட காலத்திற்கு ஒரு முறை வைத்திய ஆலோசனைப்படி தமது பாதங்களைப் பராமரிக்க வேண்டும். நீரிழிவு நோயாளிகள் தங்கள் முகத்தைப் பராமரிப்பது போல பாதங்களையும் பராமரிக்க வேண்டும். ஒவ்வொரு நாளும் தமது பாதங்கள் எவ்வாறு இருக்கின்றன என கவனிக்க வேண்டும். அதோடு பாதணிகளையும் கவனிக்க வேண்டியது அவசியம். சில உடற்பருமனான நீரிழிவு நோயாளர்களுக்கு தமது பாதங்களைப் பார்க்க முடியாத நிலை இருக்கலாம். இவ்வாறானவர்கள், கைபிடி உள்ள கண்ணாடி மூலமாகவோ அல்லது குடும்பத்தினரின் உதவியுடனோ தமது பாதங்களைப் பரிசோதித்து கொள்ளலாம்.



அடுத்ததாக, மிக முக்கியமாக ஒவ்வொரு நாளும் நீரிழிவு நோயாளர்கள் தமது பாதங்களை நன்கு நீரினால் கழுவிக் கொள்ள வேண்டும். இதற்கு சவர்க்காரத்தைப் பயன்படுத்தலாம். முக்கியமாக விரல் இடுக்குப் பகுதிகள் ஈரலிப்பாக இருப்பதை தவிர்த்துக் கொள்ள வேண்டும். அப்பகுதிகள் ஈரலிப்பாக இருக்குமானால், Fungus தொற்று ஏறபடுவதற்கான சந்தர்ப்பம் அதிகமாகும். இதனால் பல பிரச்சினைகள் ஏற்படக்கூடும். அதேபோல், இந்த நீரிழிவு நோயாளர்களின் பாதங்கள் மிக உலர்வாக காணப்படும். இவ்வாறு உலரும் போது, வெடிப்புகள் ஏற்படுவதோடு, அவ்வெடிப்புகளில் புண்கள் ஏற்படுவதற்கான சாத்தியக்கூறுகள் அதிகமாகும். இந்த உலர்வைத் தவிர்க்க, அதற்குரிய சிலவகை Cream களைப் பாவிக்கலாம். அடுத்த முக்கியமான விடயம், நீரிழிவு நோயாளிகள் தமது நகங்களைப் பராமரிக்க வேண்டும். நகங்களை அவர்கள் வெட்டும் போது, வளைவாக வெட்டாமல், நேராக வெட்ட வேண்டும். ஏனெனில், வளைவாக வெட்டும் போது நகத்தின் ஓரங்களில் காணப்படும் சதைப்பகுதியும் [illegible]கூடிய சந்தர்ப்பம் காணப்படுகிறது. அவ்விடங்களில் தொற்று ஏற்பட வாய்ப்புண்டு. உலகில் பல நாடுகளில் Podiatric எனப்படும் பாதப் பரா மரிப்பிற்கான சிறப்பு மருத்துவ சேவைகள் கிடைக்கப்பெறுகின்றன. ஆனால், துரதிர்ஷ்டவசமாக இலங்கையில் அவ்வாறான வசதிகள் மிகவும் அரிதாகவே இருக்கின்றன.

சில நீரிழிவு நோயாளிகள், தமது பாதங்களைக் கழுவுவதற்காக இளஞ்சூட்டு அல்லது வெந்நீரைப் பயன்படுத்துவார்கள். ஆனால் இவ்வாறு செய்வதால், அவர்களது பாதங்களில் உணர்ச்சிகுறைவாக இருப்பதால் புண்கள் ஏற்படுவதற்கான வாய்ப்பு அதிகமாகக் காணப்படுகின்றது. இவை ஆறாத புண்களாக கூட மாறலாம். அடுத்ததாக, பாதணிகள் அற்று, வெளியில் நடப்பதனைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும். பாதணிகள் இல்லாமல் நடப்பதால், கால்களில் புண்கள் ஏற்பட்டு, அவயவ இழப்பு ஏற்படவும் சந்தர்ப்பம் அதிகமாகக் காணப்படுகின்றது. எனவே, நீரிழிவு நோயாளிகள் வீட்டிற்குள் நடமாடும் போது ஒரு பாதணியையும், வெளியில் நடமாட வேறொரு பாதணியையும் பயன்படுத்த வேண்டும். பல நீரிழிவு நோயாளர்களுக்கு பாதங்களின் அடிப்பகுதியில் Callus ஏற்பட்டிருக்கலாம். இதற்கு அவர்கள் தாமாகவே சிகிச்சை செய்வது ஆபத்தானதாகும். இவ்வாறான தவறான செயற்பாடுகளால், புண்கள் ஏற்பட்டு, பாரிய நீண்டகால பிரச்சினைகளை ஏற்படுத்தக்கூடும். ஆகவே, நீரிழிவு நோயாளிகளின் பாதம் சம்பந்தமான எந்தவொரு பிரச்சினையாக இருந்தாலும் வைத்தியரை நாடி ஆலோசனையைப் பெற்று சிகிச்சை எடுக்க வேண்டியது அவசியமாகும். High risk foot எனப்படுகின்ற அபாயகரமான பாதங்களை உடைய நீரிழிவு நோயாளர்களுக்கு Multi disciplinary team approach எனப்படும் பல்துறை சார்ந்த நிபுணர்களின் நிபுணத்துவ ஆலோசனை தேவைப்படுகி றது. சில நோயாளிகளுக்கு விசேட வகையான பாதணிகளை உருவாக்க வேண்டிய தேவை ஏற்படும். ஆகவே, இந்த நீரிழிவு நோயாளர்களின் பாதப் பராமரிப்பு என்பது பல்துறைசார் வைத்தியர்கள் மற்றும் அனைத்து வகையான சுகாதார உதவியாளர்களின் உதவியுடன் வழங்கப்படக் கூடியதாக இருக்கிறது. நீரிழிவு நோயாளர்கள் தமது அனைத்து உறுப்புகளையும் பாதுகாப்பது போலவே இந்த பாதப் பராமரிப்பிலும் சிரத்தையாக இருக்க வேண்டும். அவர்கள் தினமும் தமது பாதங்களைப் பராமரிக்க வேண்டும். வைத்திய ஆலோசனைப்படி சிகிச்சைகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும். எனவே, நீரிழிவு நோயாளி ஒருவர் தமது உடல்நிறையைப் பராமரிப்பதுடன், குருதி குளுக்கோஸின் அளவு, குருதி அமுக்கம், குருதியில் இருக்கும் கொலஸ்திரோல் அளவு என்பவற்றைக் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருப்பதன் மூலம் இது போன்ற நீண்டகாலப் பாதிப்புகள் ஏற்படாமல் தடுக்கக் கூடியதாக இருக்கும்.

**Dr.M. அரவிந்தன்**
அகஞ்சுரக்கும் தொகுதி சிறப்பு
மருத்துவ நிபுணர்,
யாழ்.போதனா வைத்தியசாலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மின்னல் தாக்கி விவசாயி பலி

(பொலநறுவை)

பொலநறுவை - அரலகங்வில பொலிஸ் பிரிவின் கெக்குளுவெல பகுதியில் உள்ள வயல் வெளியில் வேலை செய்து கொண்டிருந்த போது மின்னல் தாக்கி நேற்று முன்தினம் மாலை விவசாயி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மின்னல் தாக்கியதில் காய மடைந்த குறித்த விவசாயி அரலகங்வில வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்ட பின்னர் உயிரிழந்ததாகக் கூறப்படுகிறது.

உயிரிழந்தவர் 63 வயதுடைய அரலகங் வில, கெக்குலுவெல பிரதேசத்தைச் சேர்ந்தவராவார்.

சடலம் பொலநறுவை ஆதார வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ள நிலையில், சம்பவம் தொடர்பில் அரலகங்வில பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர். (நி-8)


## ஐரோப்பிய ஒன்றியத்தின் கண்காணிப்புக் குழு இலங்கை வருகை

(கொழும்பு)

GSP+ சலுகை தொடர் பான நிபந்தனைகள் குறித்த முன்னேற்றத்தை மதிப்பாய்வு செய்வதற் காக ஐரோப்பிய ஒன் றியத் தின் கண்காணிப்புக் குழுவொன்று இலங்கைக்கு வருகை தரவுள்ளது. இந்தக் குழு நாளை திங்கட்கிழமை இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளும் என அறிவிக்கப் பட்டுள்ளது.

அதன்படி ஐரோப்பிய ஒன்றியத்தின் கண்காணிப்புக்குழு எதிர்வரும் 28 ஆம் திகதி முதல் மே மாதம் 7 ஆம் திகதி வரை இலங்கையில் தங்கியிருக்கும் எனத் தெரிவிக்கப்பட் டுள்ளது. (நி-8)


மணிவிழா வாழ்த்துக்கள்




திரு. கதிரவேலு செல்வரட்ணம்
(B.A, Dip in Edu, MEd)
27.04.2025

சேவை விபரம்
- யா/இளவாலை றோ.க.த.ஆண்கள் பாடசாலை (17.08.1988-01.02.1993)
- யா/பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை (02.02.1993-31.12.1994)
- யா/இளவாலை கன்னியர்மடம் ம.வித்தியாலயம் (01.01.1995-19.01.2014)
- யா/புனித ஹென்றியரசர் கல்லூரி, இளவாலை (20.01.2014-26.04.2025)

(4002)

எமது கல்லூரியில் 7 வருடங்கள் ஆசிரியராகவும் 4 வருடங்கள் பகுதித் தலைவராகவும் (க.பொ.த உயர்தரம்) சேவையாற்றி ஓய்வு பெறும் திரு.கதிரவேலு செல்வரட்ணம் ஆசிரியருக்கு இனிய மணிவிழா வாழ்த்துக்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஓய்வுக் காலத்தில் உடல், உள ஆரோக்கியத்துடனும் மனமகிழ்ச்சியோடும் என்றும் இன்பமாய் வாழ வாழ்த்துவதுடன் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

வாழ்த்துவோர்- ஆசிரியர் நலன்புரிக்கழகம், யா/புனித ஹென்றியரசர் கல்லூரி, இளவாலை.



ஸ்ரீ குருப்யோ நம; ஸ்ரீ மாத்ரே நம;
ஓம் ஸ்ரீ ராம் ஜெய் ராம் ஜெய் ஜெய் ராம்

கும்பாபிஷேக பெருவிழா
ஸ்ரீ பாலாம்பிகா தேவஸ்தானம்
(வாலையம்மன் திருக்கோவில்)



ஆவர்த்தன பிரதிஸ்டா நவ குண்ட பக்ஷ
மஹா கும்பாபிஷேகப் பெருவிழா விஞ்ஞாபனம்- 2025

| கிரியா மங்களாரம்பம் | மஹாயாகாரம்பம் | மஹா கும்பாபிஷேகம் |
|---|---|---|
| 27.06.2025 வெள்ளிக்கிழமை காலை7.00 மணி | 04.07.2025 வெள்ளிக்கிழமை மாலை 7.00 மணி | 07.07.2025 திங்கட்கிழமை காலை 10.15 மணி - பகல் 12.00 மணிக்குள் |

04.07.2025 வெள்ளிக்கிழமை காலை 7.00 மணி முதல் 05.07.2025 சனிக்கிழமை மாலை 5.00 மணிவரை அடியார்கள் எண்ணெய்க் காப்பு சாத்தும் நிகழ்வு இடம்பெறும்

பிரதிஷ்டா பிரதம குரு
"சிவாகம சிரோமணி"
சிவஸ்ரீ.சந்திர சாந்த ரூப சிவாச்சாரியார்
(தேவஸ்தான பிரதம குரு)

[4041]

"எங்கும் திருவருள் பெற்று இன்புறுவர்"

இலங்கை, இந்திய தலைசிறந்த அந்தண சிவாச்சாரிய பெருமக்கள் இப் பெருஞ்சாந்தியில் கலந்து சிறப்பிப்பார்கள்.





NSR JEWELLERY

மங்கையர் மனங்கவரும் தங்கநகைகளின்
தரம்மிக்க கைராசி நிறுவனம் உங்கள்

NSR ஜுவல்லறி







30.04.2025 அக்ஷய திருதியை முன்னிட்டு
27.04.2025 முதல் 29.04.2025 வரை

முற்பதிவுகளை மேற்கொண்டு உங்கள் கைராசி நிறுவனத்தில் நகை வாங்கி விசேட விலைக்கழிவுகளைப் பெறுவதுடன் பெறுமதிமிக்க பரிசில்களையும் பெற்றிடுங்கள்.



தரம்மிக்க தங்க நகைகளின் தரணிபோற்றும் உங்கள் ஸ்தாபனம்

NSR ஜுவல்லறி,
இல:131,
கஸ்தூரியார் வீதி,

021 222 2809,
077 641 76769


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மக்கள் வங்கி தனது ஊர்காவற்றுறை கிளையினை 02 ஆம் ஒழுங்கை, பண்ணை வீதியில் அமைந்துள்ள புதிய இடத்திற்கு மாற்றம் செய்து வைக்கப்பட்ட அங்குரார்ப்பண நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது.






# தந்தை செல்வநாயகத்தின்
## 48 ஆவது நினைவேந்தல் அனுஷ்டிப்பு



(யாழ்ப்பாணம்)

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நிறுவுனர் தந்தை செல்வநாயகத்தின் 48 ஆவது நினைவேந்தல் நிகழ்வு நேற்று யாழிலுள்ள தந்தை செல்வாவின் நினைவு சதுக்கத்தில் இடம்பெற்றது.

இதன்போது தந்தை செல்வாவின் உருவச்சிலைக்கு மலர்மாலை அணிவித்து சமாதியில் மலர் அஞ்சலியும் செலுத்தப்பட்டது.

அதேவேளை வவுனியா, மணிக்கூட்டு கோபுர சந்தியில் அமைந்துள்ள தந்தை செல்வாவினது சிலைக்கு முன்பாகவும் நேற்றைய தினம் அஞ்சலி நிகழ்வு இடம்பெற்று இருந்தமை குறிப்பிடத்தக்கது. (6-8-33)



# ஊழல்வாதிகள் இனி தப்பிக்கவே முடியாது!
## வெளிவிவகார பிரதியமைச்சர்

(கொழும்பு)

ஊழல் மோசடியில் ஈடுபட்டோர், படுகொலைகளில் ஈடுபட்டோர், ஆட்கடத்தல்களில் ஈடுபட்டோர், யாரும் இனி தப்பிக்கவே முடியாது. அரசாங்கம் இந்த விடயத்தில் உறுதியாக இருக்கின்றது.

கடந்த காலங்களில் சட்டத்தில் இருந்த ஓட்டைகளை பாவித்து யாரும் தப்பித்தார்கள் என்றால் அது இனிவரும் காலங்களில் இடம்பெற முடியாது என வெளிவிவகாரப் பிரதியமைச்சர் அருண் ஹேமச்சந்திரா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், குற்றச்சாட்டுக்களை முன் வைத்து தான் நபர்கள் கைது செய்யப்படுகிறார்கள். அவர்கள் தொடர்பான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அந்த விசாரணைகளின் அடிப்படையில்தான் கைதுகள் மேற்கொள்ளப்படுகின்றன. சில விசாரணைகளை அவதானித்தால் சிறிய குற்றச்சாட்டுகளாக இருக்கின்றன.

இன்னும் சில குற்றச்சாட்டுகளை பார்த்தால் மிகவும் பாரதூரமான குற்றச்சாட்டுக்களாக காணப்படுகின்றன.

இவ்வாறு கைது செய்யப்படுபவர்களை எதிர்த்தரப்பினர் அரசியல் பழிவாங்கல் என யோசிக்கின்றார்கள்.

இந்த ஊழல்வாதிகளுக்கும் மோசடிக்காரர்களுக்கும் ஆட்கடத்தல்காரர்களுக்கும் படுகொலை செய்தவர்களுக்கும் வாக்களிப்பதற்கு மக்கள் இருக்கின்றார்கள். மக்கள் தமது மனதுகளை சரியான முறையில் தெளிவுபடுத்திக் கொண்டு வாக்களிக்குமாறு தெரிவித்தார். (நி-8)



மக்கள் வங்கி தனது பலாலி சேவை நிலையத்தினை மயிலிட்டியில் அமைந்துள்ள புதிய கட்டடத்திற்கு இடமாற்றம் செய்து வைக்கப்பட்ட அங்குரார்ப்பண நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது.

# ஆத்மசாந்திப் பிரார்த்தனை



வணக்கத்திற்குரிய ரிஷி தொண்டுநாத சுவாமிகளின்
அன்புத் தாயார்

## திருமதி. சிவலோசினி கனகரட்ணம்

அவர்கள் இறைபதம் அடைந்தார். அவரின் புனிதமான ஆத்மா சிவப்பரம்பொருளின் பொன்னார் திருவடிகளில் பேரின்பம் அடையப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி!

வலம்புரி நிர்வாகம்

# நாட்டில் 120 வகையான மருந்துகளுக்குத் தட்டுப்பாடு

(கொழும்பு)

நாட்டில் 120 வகையான மருந்துகளுக்குத் தட்டுப்பாடு நிலவுவதாக அரச மருந்தாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

மருந்து உற்பத்தி தொடர்பான நிபுணத்துவம் கொண்ட தரப்பினரின் பற்றாக்குறையின் காரணமாகவே இந்த நிலை ஏற்பட்டுள்ளதாக அந்த சங்கத்தின் தலைவர் துஷார ரணதேவ தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் பல பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

எனினும் அவை தொடர்பில் கலந்துரையாடுவதற்கேனும் தற்போதைய சுகாதார அமைச்சர் தயாராக இல்லை என அரச மருந்தாளர்கள் சங்கத்தின் தலைவர் தெரிவித்துள்ளார். (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செல்லப்பா சுவாமிகளின் குருபூசை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நல்லூர் தேரடிச் சித்தர் செல்லப்பா சுவாமிகளின் மாதாந்தக் குருபூசை நிகழ்வு இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு நல்லூரில் அமைந்துள்ள சுவாமிகளின் நினைவாலயத்தில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் அபிஷேகம், திருமுறை மற்றும் நற்சிந்தனை ஓதலைத் தொடர்ந்து, "பழைமையைப் பேணல்" எனும் தொனிப் பொருளில், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சைவ சித்தாந்தத் துறைத் தலைவர் கலாநிதி பொன்னுத்துரை சந்திரசேகரம் உரையாற்றவுள்ளார். (3-8)

# சதுர்த்தி உற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ். வண்.வடகிழக்கு கலட்டி வீரகத்திப் பிள்ளையார் ஆலய சதுர்த்தி உற்சவம் எதிர்வரும் மே மாதம் 1 ஆம் திகதி வியாழக் கிழமை காலை 10.15 மணிக்கு அபிஷேகம், மூல மூர்த்தி பூஜை, வசந்த மண் டபப் பூஜை நடை பெற்று விநாயகப் பெருமானின் திரு வீதியுலாவும் இடம்பெறவுள்ளது என ஆலயப் பிரதம குருக்கள் சிவஸ்ரீ து.விவேகானந்தக் குருக்கள் தெரிவித்துள்ளார். (3-8)

# பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் மாபெரும் பொதுக் கூட்டம் இன்று ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 4 மணிக்கு மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக் கழகத்தில் முன்னாள் மாகாணசபை உறுப்பினர் சந்திரலிங்கம் சுகிர்தன் தலைமையில் இடம்பெறவுள்ளது என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (3-8)

# அறக்கொட்டியான் தாக்கம் கட்டுப்படுத்த விழிப்பூட்டல் நடவடிக்கை



(தருமபுரம்)

கிளிநொச்சி மாவட்டத்தில் தற்போது மேற்கொள்ளப்பட்டுவரும் சிறுபோக நெற்செய்கையில் பாதிப்பினை ஏற்படுத்திவரும் அறக்கொட்டியான் தாக்கத்தினை கட்டுப்படுத்துவது தொடர்பான விழிப்புணர்வூட்டல் கருத்தரங்கு புளியம் பொக்கணை கமநலசேவை நிலையத்தில் நேற்று இடம்பெற்றது. கிளிநொச்சி மாவட்ட பிரதி மாகாண விவசாயத் திணைக் களத்தின் ஏற்பாட்டில் தருமபுரம், புளியம்பொக்கணை மற்றும் கண்டாவளை விவசாயப்போதனாசிரியர்களினால் நடாத்தப்பட்டது.

இந்நிகழ்வில் தருமபுரம், கண்டாவளை மற்றும் புளியம் பொக்கணை ஆகிய பிரதேசங்ளைச்சேர்ந்த விவசாயிகளும் பொதுமக்களும் கலந்து கொண்டனர்.

அதேவேளை கிளிநொச்சி மாவட்ட பிரதி விவசாய பணிப்பாளர் அலுவலக பாடவிதான உத்தியோகத்தர்களால் நடமாடும் சேவையூடாக ஒலி பெருக்கி மூலமாக தருமபுரம், புளியம்பொக்கணை, கண்டாவளை, ஊரியான், முரசுமோட்டை, குமரபுரம், பன்னங்கண்டி மற்றும் இராமநாதபுரம் ஆகிய பகுதிகளில் "நெற் செய்கையில் அறக்கொட்டியான் தாக்கத்தை கட்டுப்படுத்துவது" தொடர்பான விழிப்புணர்வூட்டல் நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டதுடன் இதன்போது பொதுமக்களுக்கு இதுவிடயம் தொடர்பான விழிப்புணர்வு துண்டுப்பிரசுரங்களும் விநியோகிக்கப்பட்டது.(6-8-316)

# இளங்கலைஞர் மன்ற மாதாந்தக் கலையரங்கு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் இளங்கலைஞர் மன்றம் நடத்தும் "மாதாந்தக் கலையரங்கு" நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு நல்லூர், இளங்கலைஞர் மன்றத்தில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வில் இளங் கலைஞர் மன்ற மாணவர்களின் குழ வயலினிசை, யாழ். பல்கலைக்கழக இசைத்துறை மாணவர்களின் குழு இசை மற்றும் இரட்டை வயலின் இசையரங்கு ஆகிய நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன என நல்லூர் இளங் கலைஞர் மன்ற நிர்வாக சபையினர் தெரிவித்துள்ளனர். (6-8)

# மஹோற்சவம்


(யாழ்ப்பாணம்)

தாவடி கொக்குவில் ஸ்ரீ வட பத்திரகாளி அம்பாள் ஆலய வருடாந்த மகோற்சவம் நாளை திங்கட்கிழமை காலை 10 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பதினைந்து தினங்கள் இடம்பெறவுள்ளன.

இம் மகோற்சவ தினங்களில் எதிர்வரும் மே மாதம் 11 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு இரதோற்சவமும் 12 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10.30 மணிக்குத் தீர்த்தோற்சவமும் அன்று மாலை 6 மணிக்கு கொடியிறக்கமும் இடம்பெற்று 13 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 11 மணிக்கு பூங்காவன உற்சவமும் இடம்பெறவுள்ளது என ஆலய ஆதீனகர்த்தா பிரம் நா. சசிதரசர்மா தெரிவித்துள்ளார். (3-8)


## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் ஆசிரியர் திரு.கேசவன் பஞ்சாட்சரம்
அவர்களின் அன்புத் தந்தையார்



தோற்றம் 02 - 12 - 1940

மறைவு 08 - 04 - 2025

அமரர்.துரைச்சாமி பஞ்சாட்சரம்

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த இரங்கல்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் நலன்புரிக் கழகம், யா/கொக்குவில் இந்து கல்லூரி.

## கண்ணீர் அஞ்சலி

தோற்றம் 17 * 05 * 1947



மறைவு 25 * 04 * 2025

திருமதி. நடேசு கமலாதேவி

எமது பாடசாலையின் நடனப் பாட ஆசிரியை
திருமதி. அனுஜா றிஜிகாந் அவர்களின் அன்புத் தாயார்
25.04.2025 அன்று இறைபதம் அடைந்துவிட்டார்.
அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் நலன்புரிக் கழகம்,
யா/ கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயம்

(4308)


# இராசிபலன்

27.04.2025
சித்திரை 14, ஞாயிற்றுக்கிழமை
அமாவாசை பின்னிரவு 1.37 மணிவரை

அச்சுவினி பின்னிரவு 1.09 மணிவரை
சுபநேரம் 8.59-10.29 மணிவரை
இராகுகாலம் 4.29-5.59 மணிவரை

அமாவாசை விரதம்
சந்திராஷ்டமம்-
உத்தரம்,அத்தம்.

வள்ளவன்




வழிபாட்டால் இன்பம் காண வேண்டிய நாள், கனவுப் பலிதமுண்டு, எதிர்பார்க்காமல் செய்த வேலையொன்றில் கணிசமான ஆதாயம் கிடைக்கலாம், போசன சுகமுண்டு.




குடும்ப மகிழ்ச்சி கூடும், தொட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள் , போசன சுகமுண்டு.




இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், சந்தித்தவர்களால் சந்தோசம் காணும் நாள், வழிபாட்டால் முன்னேற்றம் காண வேண்டிய நாள்.




பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், பெற்றோரின் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.




சுப காரியச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், உறவினர் நண்பர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, விருப்பங்கள் நிறைவேற இஸ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள்.




பேச்சில் இனிமை தென்படும், சிக்கல்கள் விலகி சிறப்புக்கள் கூடும் நாள், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், வீட்டை அழகாக வைத்திருப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள்.




பொது வாழ்வில் புகழ் கூடும் நாள், திட்டமிட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், பிறர் உதவியுண்டு.




குடும்பப் பொறுப்புகள் கூடும், பாகப் பிரிவினைகள் சுமூகமாக அமையும், முயற்சிகளில் முத்தான வெற்றி கிடைக்கும், வழிபாடு பெருமை சேர்க்கும்.




மற்றவர்கள் பாராட்டும் வகையிலான செயல் ஒன்றைச் செய்து முடிப்பீர்கள், எதிர்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், போசன சுகமுண்டு.




வெளியூர் பயணங்களின் போது பொருட்களில் கவனம் தேவை, உடல் நலனில் கவனம் செலுத்தும் சூழ்நிலை ஏற்படலாம், புதிய முயற்சிகளைத் தள்ளிப் போடுவது நல்லது.




நெடுநாளைய கனவுகள் நனவாகலாம், சுப செய்திகள் வந்து சேரலாம், பூர்வீகச் சொத்து சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு, தாழ்ந்த சுபாவமுண்டு.




சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காணும் நாள், வழிபாட்டில் ஆர்வம் கூடும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், போசன சுக முண்டு

இன்பமும் துன்பமும் விதியன்று தானாகத் தேடிக் கொள்வது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்காரவேலன் சிவகாயத்ரி சுவர்க்கவாயில் சந்நிதானம்



## மாதாந்த அமாவாசை தின ருத்ர ஹோம வழிபாடும் அன்னதானமும்

நேசம் நிறை நெஞ்சத்தீர்!

வண்ணை ஸ்ரீ வீரமாகாளியம்மன் ஆலய வளாகத்தின் ஈசான பாகத்தில் அமைந்துள்ள சிங்காரவேலன் சிவகாயத்ரி சந்நிதானத்தில் மாதாந்த அமாவாசை தின ருத்ர ஹோம வழிபாடு இன்று (27.04.2025) ஞாயிற்றுக்கிழமை சிறப்பாக நடைபெற ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

உற்சவ விபரம்

**கும்ப பூஜை - காலை 09.00**

**மூலஸ்தான பூஜை - காலை 11.00**

தொடர்ந்து உபயகாரர்களின் குடும்ப பிதிர்களுக் கான தர்ப்பண வழிபாடுகள் நடைபெறும்.

பூஜைகள் நிறைவடைந்ததும் நண்பகல் 12.00 மணியளவில் அன்னதானம் வழங்கப்படும்.

இங்ஙனம்
கௌரவ கலாநிதி ராஜஸ்ரீ
சிவகமல்ராஜ் குருக்கள்
முதன்மை பிரதம குருவும் ஆதீன
கர்த்தாவும் மேற்படி தேவஸ்தானங்கள்

உபயம் : திரு.திருமதி
சிறிகுமார் துஸ்யந்தினி
குடும்பம் (U.K)

"தெளிவே எம் சிந்தனை"

(C-2824)

## உயர் தரத்தில்...

முதலிடத்தையும் பெற்றுள்ளார்.

உயிரியல் பிரிவில் யாழ்ப்பா ணம் இந்துக் கல்லூரி மாணவன் ஜமுனானந்தா பிரணவன் தேசிய ரீதியில் மூன்றாம் இடத்தையும் மாவட்ட ரீதியில் முதலிடத்தையும் பெற்றுள்ளார்.

வர்த்தகப்பிரிவில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மாணவன் விஜய சுந்தரம் வாரணன் யாழ்.மாவட்ட ரீதியில் முதலிடத்தைப் பெற்றுள் ளார்.

பொறியியல் தொழில்நுட்பப் பிரி வில் யாழ்.மத்திய கல்லூரி மாண வன் வியாகர்ணன் பிரவீன் யாழ். மாவட்ட ரீதியில் முதலிடத்தைப் பெற்றுள்ளார்.

உயிர்முறைமைகள் தொழிநுட் பப் பிரிவில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மாணவன் ஜெகதீஸ்வரன் துசாந்த் யாழ்.மாவட்ட ரீதியில் முத லிடத்தைப் பெற்றுள்ளார்.

கலைப்பிரிவில் மயூரா மணி வண்ணன் யாழ்.மாவட்ட ரீதியில் முதலிடத்தைப் பெற்றுள்ளார்.

(ம-4,7)

## பணிப்பெண் தேவை

யாழ்ப்பாணத்தில் சிறிய குடும்பம் ஒன்றிற்கு தங்கி நின்று வேலை செய்வதற்கு பணிப்பெண் தேவை. வயது 35 இற்கு உட்பட்டவர்கள் விரும்பத்தக்கது.
தகுந்த சம்பளம் வழங்கப்படும்.

**077 774 3185**

(4043)

## ஸ்ரீ சாயி துர்க்காதேவி ஆலயம் கொக்குவில்

### விசேட பொதுக்கூட்டம்

மேற்படி ஆலயத்திற்குக் கிடைக்கப் பெற்ற பிரேரணைகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட வேண்டிய தீர்மானங்கள் தொடர்பாக விசேட பொதுக்கூட்டம் 11.05.2025 ஆம் திகதி மாலை 4.00 மணிக்கு ஆலய முன்றலில் நடைபெறவுள்ளது. அங்கத்தவர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

செயலாளர்
ஆலய பரிபாலன சபை

(4044)

## யாழ்....

வெளியாகியுள்ள நிலையில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் 55 மாணவர்கள் 3A சித்தி பெற்றுள்ளனர்.

(ம-4,7)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127


# KARAVAI CARE

உங்கள் பாசத்துக்குரியவர்களை அன்பாகப் பராமரிப்பதற்கு

## கரவை நலவாழ்வு இல்லத்தினை

தெரிவு செய்து மன நிம்மதியுடன் வாழுங்கள்...



### எமது சேவைகள்

01. தனிப்பட்ட பராமரிப்பு
02. விசேட தேவையுடையோரிற்கான பராமரிப்பு
03. சிறிதளவு மனநலம் பாதிக்கப்பட்டவருக்கான பராமரிப்பு
04. தொழில்புரிவோருக்காக பகல்நேர பராமரிப்பு
05. மருத்துவ சேவைகள்
06. யோகா மற்றும் தியானம்

குறுகிய கால தங்குமிட வசதியும் உண்டு
(வெளிநாடுகளிலிருந்து கோவில் திருவிழா, கல்யாணம், விடுமுறைக்கு வருபவர்கள் தங்களது பெற்றோர்களை எமது இல்லத்தில் தங்கவைத்துவிட்டு தங்களது அலுவல்களை மேற்கொள்ளலாம்.)

மனோ/ + 44 773 716 9030 021 226 6144
ஜெகன்/ + 94 777 140 090 075 6988 500

whatsapp மூலமும் தொடர்புகொள்ளலாம்.

ஏப்ரல் 1 ஆம் திகதி முதல் அனுமதிகள் ஏற்றுக் கொள்ளப்படும்.

கோவிற்கடவை பூந்தோட்டம்,
துன்னாலை மத்தி, கரவெட்டி.

Email:karavaicare@gmail.com
mano8@tiscali.co.uk

அனுசரணை

அல்லையம்பதி இரும்பகம்,
அல்லையம்பதி, துன்னாலை.
075 646 9527, 077 625 1768

தாஸ் அலுமினியம் பிற்றிங்
பருத்தித்துறை வீதி, நெல்லியடி.
V.விஜயதாசன் T.P.No 077 292 4741
whatsapp No. 077 625 [illegible]

டிலக்சன் வெல்டிங் சென்ரர்
சிறி நாரதா வீதி, கரவெட்டி மேற்கு, கன்பொல்லை
[illegible] (தீபன்) 077 241 3069

மற்றும் நலன்விரும்பி ,
நெல்லியடி,(M.M.V Road)

மனோகரன் இரும்பகம்
மந்திகை 077 925 6723

(சு-2819)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நாம் நம் சுயமரியாதையில் நிலைத்திருந்தால், அது பிறரும் தன் சுயமரியாதையை மீட்டெடுக்க உதவும். – அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

# உள்ளூராட்சி சபைகள் விழிப்படைந்தால்...

உள்ளுவதெல்லாம் உயர்வு என்பான் வள்ளுவன்.

ஆம், எம்மிடம் உயர்ந்த சிந்தனைகள் இருக்க வேண்டும். இங்கு உயர்ந்த சிந்தனை என்பது நல்லவற்றை எண்ணுவதாகும்.

அந்த வகையில், எங்கள் மண்ணில் உள்ள உள்ளூராட்சி சபைகள் விழிப்படையுமாக இருந்தால், எங்கள் பிரதேசம் உன்னதமான நிலையை அடையும் என்பது சர்வநிச்சயம்.

ஆம், உள்ளூராட்சி சபைகளான பிரதேச நகர, பட்டின, மாநகர சபைகள் மக்களின் வாழ்வியலோடு ஒன்றித்துள்ளன.

எனவே குறித்த உள்ளூராட்சி சபைகள் உன்னதமான சேவையை வழங்கும்போது அந்தந்தப் பிரதேசம் ஒரு புதிய மறுமலர்ச்சிக்கு ஆட்படும்.

எனினும் எங்கள் உள்ளூராட்சி சபைகளில் குறிப்பிட்ட சபைகள் தவிர்ந்த ஏனையவை மிகவும் மந்தமாகவே இயங்குகின்றன.

அதிலும் கழிவகற்றல் முகாமைத்துவத்தில் சில சபைகள் மிகவும் பின்தங்கிய நிலையில் இருப்பதைக் காண முடியும்.

இதன் காரணமாக எங்கள் வாழ்விடங்கள் இன்னமும் குப்பை கூழங்கள் நிறைந்த இடமாக இருப்பது கண்கூடு.

இதுதவிர, மிகச் சிறந்த முறையில் பேணப்படுகின்ற கழிப்பறைகள் எவையும் இங்கு இல்லை எனும்போது, எங்கள் தொடர்பான மற்றவர்களின் கணிப்பு எப்படியாக இருக்கும் என்பதை எவரும் இலகுவில் புரிந்து கொள்ள முடியும்.

ஆக, எதிர்வரும் மே 6ஆம் திகதி உள்ளூராட்சி சபைத் தேர்தல் நடைபெறவுள்ளது.

இதில் மக்கள் வாக்களித்து உள்ளூராட்சி சபைக்கான ஆட்சியை அமைக்கவுள்ளனர்.

எனவே உள்ளூராட்சி சபைகளைக் கைப்பற்றுகின்ற அரசியல் தரப்புகள், தத்தம் ஆளுகைக்குட்பட்ட உள்ளூராட்சி சபைகளை மிகவும் உன்னதமாக நடத்த வேண்டும்.

அதற்கான முன்னாயத்தங்களை மக்கள் சமூகத்துடன் சேர்ந்து திட்டமிட வேண்டும்.

இவையாவற்றுக்கும் மேலாக, உள்ளூராட்சி சபைகளில் இருக்கக்கூடிய ஊழல் கலாசாரத்தை வேரறுத்து ஒரு புதிய பரிணாமத்தை உருவாக்குதல் அவசியம்.

ஏனெனில், உள்ளூராட்சி சபைகளில் ஊழல்கள் மலிந்து கிடக்கின்றன. இவ்வாறு ஊழல் தாண்டவம் ஆடும் போது உள்ளூராட்சி சபைகளின் சேவைகள் சாதாரண மக்களைச் சென்றடையாது என்பதுடன், உரிய சட்டதிட்டங்களும் நடைமுறையின்றிப் போகும்.

இதனாலேயே உள்ளூராட்சி சபைகளே ஊழல் அரசியலின் பாலர் பாடசாலைகள் என பிரதமர் ஹரிணி அமரசூரிய கூறியிருந்தார். அவர் கூறிய யதார்த்தத்தை அமையப் போகும் உள்ளூராட்சி சபைகளுக்கான மக்கள் பிரதிநிதித்துவம் உணர்ந்து கொண்டு செயலாற்றுவது மிகவும் அவசியமானது.

# தேர்தல் சட்டத்தை மீறிய 28 வேட்பாளர்கள் கைது

## பொலிஸ் ஊடகப் பிரிவு

(கொழும்பு)

உள்ளூராட்சி சபைத் தேர்தல் சட்டங்களை மீறியமை மற்றும் தேர்தலுடன் தொடர்புடைய ஏனைய குற்றங்கள் தொடர்பில் 28 வேட்பாளர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு நேற்று அறிவித்துள்ளது.

உள்ளூராட்சி சபைத் தேர்தல் தொடர்பில் இதுவரை 330 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்றும் பொலிஸ் ஊடகப் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

அதன்படி தேர்தல் சட்டங்களை மீறியமை தொடர்பில் 259 முறைப்பாடுகளும் தேர்தலுடன் தொடர்புடைய ஏனைய குற்றங்கள் தொடர்பில் 71 முறைப்பாடுகளும் கிடைத்துள்ளன.

இந்நிலையில் தேர்தல் சட்டங்களை மீறியமை மற்றும் தேர்தலுடன் தொடர்புடைய ஏனைய குற்றங்கள் தொடர்பில் 28 வேட்பாளர்களும் 111 சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தேர்தல் நடவடிக்கைகளுக்காகச் சட்டவிரோதமாகப் பயன்படுத்தப்பட்ட 26 வாகனங்களும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன என்றும் பொலிஸ் ஊடகப் பிரிவு மேலும் தெரிவித்துள்ளது. (ம-4,7)

### உயர்தரப் பரீட்சை

## தேசிய ரீதியில் முதலிடம் பெற்றவர்களின் விபரங்கள்

2024 ஆம் ஆண்டு உயர்தரப் பரீட்சையின் பெறுபேறுகளுக்கமைய சிறந்த பெறுபேற்றைப் பெற்றவர்களின் விபரங்கள் வெளியாகியுள்ளன.

அதன்படி உயிரியல் பிரிவில் குருநாகல் மலியதேவ மகளிர் வித்தியாலய மாணவி ஹேகொட ஆராச்சிகே சந்திதி நிம்ஹார நாடளாவிய ரீதியில் முதலிடத்தைப் பெற்றுள்ளார்.

கணிதப் பிரிவில் நாடளாவிய ரீதியில் முதலிடத்தைக் கம்பஹா பண்டாரநாயக்க கல்லூரியின் மாணவன் லெந்து ரணசிங்க குமாரகே பெற்றுள்ளார்.

கொழும்பு விசாகா கல்லூரியின் மாணவி கங்கானிகே அமாஷா துலாரி பெரேரா வணிகப் பிரிவில் நாடளாவிய ரீதியில் முதலிடத்தைப் பெற்றுள்ளார். (ம-4,7)

### ரூ.80 கோடி பெறுமதியான

## போதைப்பொருட்களுடன் சந்தேக நபர் ஒருவர் கைது

(கொழும்பு)

கொட்டிகாவத்தை, நாகஹமுல்லப் பகுதியில் உள்ள வீடொன்றில் சுமார் 80 கோடி ரூபாய் பெறுமதியான போதைப் பொருட்களுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடமிருந்து 13 கிலோ 372 கிராம் ஹெரோயினும் மற்றும் 3 கிலோ 580 கிராம் ஐஸ் போதைப்பொருளும் கைப்பற்றப்பட்டன.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் 27 வயதானவர் என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர்.(ம-4,7)

### வட்டுக்கோட்டைப் பொலிஸ் பிரிவில்

## 14 வயதுச் சிறுமியை தவறான முறைக்கு உட்படுத்திய மூவர் கைது

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டைப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட தொல்புரம் பகுதியில் 14 வயதுச் சிறுமியை தவறான முறைக்கு உட்படுத்திய மூவர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த சிறுமி நீண்டகாலமாக இவ்வாறு தவறான முறைக்கு உட்படுத்தபட்டு வந்துள்ளதாகப் பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இதன்படி பாதிக்கப்பட்ட சிறுமி மருத்துவப் பரிசோதனைகளுக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை சந்தேக நபர்களை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை வட்டுக்கோட்டைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-4,7)

# மசகு எண்ணெய் விலை அதிகரிப்பு

சர்வதேசச் சந்தையில் மசகு எண்ணெயின் விலை நேற்றுச் சற்று அதிகரிப்பைப் பதிவு செய்துள்ளது.

உலக சந்தையில் WTI ரக மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 63.02 அமெரிக்க டொலராக அதிகரிப்பைப் பதிவு செய்துள்ளது.

அத்துடன் பிரெண்ட் ரக மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 66.87 அமெரிக்க டொலராக அதிகரித்துள்ளது.

இதேவேளை உலக சந்தையில் இயற்கை எரிவாயுவின் விலை நேற்று 2.93 அமெரிக்க டொலராக அதிகரிப்பைப் பதிவு செய்துள்ளது. (ம-4,7)

### மழை நீர் தேங்கி நின்ற

## குழியில் விழுந்த ஒரு வயதுக் குழந்தை பலி

கிண்ணியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட காக்காமுனை, கோழிமுட்டை கரச்சை பகுதியில் மழைநீர் தேங்கி நின்ற குழியில் விழுந்து ஒரு வயது நிரம்பிய குழந்தை உயிரிழந்துள்ளது.

நேற்றுக் காலை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

ஒரு வயதும் இரண்டு மாதங்களும் நிரம்பிய குடும்பத்தின் ஒரே ஒரு மகனான முகமது சையான் மிசாரி என்ற குழந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளது.

வீட்டு முற்றத்தில் தனது தொட்டிலுக்கு அருகில் விளையாடிக் கொண்டிருந்த இந்தக் குழந்தை, வீட்டுக்கு முன்னால் மழைநீர் தேங்கி நிற்கின்ற குழிக்குள் சென்று விளையாட முற்பட்டபோதே இந்த அனர்த்தம் ஏற்பட்டிருப்பதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த இரண்டு தினங்களுக்கு முன்னர் பெய்த மழை காரணமாக தற்போது இந்தப் பகுதியில் நீர் தேங்கி நிற்பது குறிப்பிடத்தக்கது. (ம-4,7)

### 65 சதவீதப் பரீட்சார்த்திகள்

## பல்கலைக்கழக நுழைவுக்கு விண்ணப்பிக்கத் தகுதி

2024 ஆம் ஆண்டு கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் மொத்தம் 149,964 பாடசாலைகளின் பரீட்சார்த்திகள் பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்கத் தகுதி பெற்றுள்ளதாகப் பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

மொத்தம் 27,624 தனியார் பரீட்சார்த்திகளும் பல்கலைக்கழகங்களுக்கு விண்ணப்பிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

அதன்படி மொத்தம் 177,588 பேர் அல்லது பரீட்சை எழுதிய மொத்த விண்ணப்பதாரர்களில் 64.73வீதமானோர் பல்கலைக்கழக நுழைவுக்கு விண்ணப்பிக்க தகுதி பெற்றுள்ளனர்.

இதற்கிடையில் 420 பாடசாலை பரீட்சார்த்திகள் உட்பட 456 பரீட்சார்த்திகளின் முடிவுகள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் உயர்தரப் பெறுபேறுகளை மறுபரிசீலனை செய்வதற்கான விண்ணப்பங்கள் மே 2 முதல் மே 16 வரை ஏற்றுக்கொள்ளப்படும் என்று பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

2024 ஆம் ஆண்டு உயர்தரப் பரீட்சைக்கு மொத்தம் 222,774 பாடசாலைப் பரீட்சார்த்திகளும் 51,587 தனியார் பரீட்சார்த்திகளும் தோற்றினர். (ம-4,7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொந்தக் காணிகள் இருந்தும் பயன்பெற முடியாமல் தவிப்பு!

## வட்டுவாகல் மக்கள் ஆதங்கம்

(நெளுக்குளம்)

**சொந்தக் காணிகள் இருந்தும் அதன் பயனை பெற முடியாத நிலைக்கு தாம் தள்ளப்பட்டுள்ளதாக வட்டுவாகல் மக்கள் ஆதங்கம் வெளியிட்டுள்ளனர்.**




வட்டுவாகல் கோத்தபாய கடற்படையினரால் அபகரிக்கப்பட்ட மக்களுடைய காணிகளின் விடுவிப்பு தொடர்பாக வட்டுவாகல் கிராம மட்ட அமைப்புகளின் உறுப்பினர்கள் இணைந்து உதயசூரியன் சனசமூக நிலையத்தில் நேற்று முன்தினம் கலந்துரையாடல் ஒன்றினை மேற்கொண்டிருந்தனர். இதன்போது இவ்வாறு தெரிவித்தனர்.

தென்னை, பனைவளம், வயல் நிலங்கள், முந்திரிகை இருந்தும் அதன் பயனை பெற முடியாதளவில் இருக்கின்றோம். எங்களுடைய மூதாதையர்களுடைய சொத்தினை நாங்கள் பார்க்காமல் போய் விடுவோமோ? என்ற பயம் எங்களுக்குள்ளே இருக்கின்றது.

குறித்த வளங்கள் நிறைந்த காணிகளை மீள கையளித்து இருந்தால் எமது வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டு இருக்காது என வட்டுவாகல் மக்கள் கவலையுடன் தெரிவித்தனர்.

மூன்று சந்ததிகளை கடந்து வந்திருக்கின்றோம். அவர்களுக்கும் இந் நிலம் கிட்டுமோ என்று தெரியாத நிலை இருக்கிறது. கடல்வளம், விவசாயம், கால்நடைகளை நம்பி வாழ்கின்றோம். தற்போது அரசாங்கம் மாறியிருக்கின்ற இந்த காலத்திலாவது எமக்கு நியாயமான தீர்வு கிடைக்க காணிகளை எங்களுக்கு விடுவிக்க ஜனாதிபதி ஆவன செய்ய வேண்டுமென அப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (6-8-299)

# அமைச்சர் பிமல் ரத்நாயக்க நெடுந்தீவுக்கு விஜயம்



(யாழ்ப்பாணம்)

போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க நேற்று நெடுந்தீவுக்கு விஜயமொன்றை மேற்கொண்டிருந்தார்.

இதன்போது நெடுந்தீவு பிரதேச சபைக்கான தேர்தலில் போட்டியிடும் தேசிய மக்கள் சக்தி சார்பில் போட்டியிடும் வேட்பாளர்கள் அறிமுக நிகழ்வு நெடுந்தீவு மத்தியில் அமைந்துள்ள கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது.

இதில் அமைச்சர் கட்சியின் நிலைப்பாடு தொடர்பிலும் ஆட்சிக்கு வந்து இதுவரை தம்மால் மேற்கொள்ளப்பட்ட வேலைத் திட்டங்கள் தொடர்பிலும் உரையாற்றியிருந்தார்.

இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் இளங்குமரன் இந்து மதகுருமார் மற்றும் கட்சி சார் உறுப்பினர்கள் பொதுமக்கள் என இச் சந்திப்பில் கலந்து கொண்டிருந்தனர். (6-8)

# உணவக உரிமையாளருக்கு ரூ.25 ஆயிரம் தண்டம் விதிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பருத்தித்துறை நகரசபையின் ஆளுகைக்குட்பட்ட பகுதியில் சுகாதார சீர்கேட்டுடன் இயங்கிய உணவகம் ஒன்றின் உரிமையாளருக்கு 25ஆயிரம் ரூபாய் தண்டப்பணம் விதித்து பருத்தித்துறை நீதவான் நீதிமன்றம் நேற்று முன்தினம் உத்தரவிட்டுள்ளது.

பருத்தித்துறை நகரசபையின் பொது சுகாதார பரிசோதகரால் உடல்நலத்தகுதியை உறுதிப்படுத்தும் மருத்துவ சான்றிதழ் இல்லாமல் ஊழியர்களை உணவகத்தில் அனுமதித்தமை, தனிநபர் சுகாதாரம் பேணாமை, கழிவு நீரினை வெளிச்சூழலிற்கு வெளியேற்றியமை, குடிப்பதற்கும் சுத்திகரிப்பிற்கும் பயன்படும் நீரானது குடிக்கத்தக்கது என உறுதி செய்யத் தவறியமை, கையில் வெட்டுக்காயங்களுடன் உரிய பாதுகாப்பு கவசம் இல்லாமல் உணவினை கையாண்டமை போன்ற குற்றச்சாட்டுகளிற்கு எதிராக குறித்த உணவகத்துக்கு எதிராக பருத்தித்துறை நீதவான் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இந்நிலையில் இந்த வழக்கு நேற்றைய தினம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.(6-8)

# யாழ் ⇄ காங்கேசன்துறை மே இல் இருந்து சேவை ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

764 வழித்தட சிற்றூர்த்திகள் யாழ்ப்பாணத்திலிருந்து பலாலி வீதியூடாக காங்கேசன்துறை வரையும் 769 வழித்தட சிற்றூர்திகள் யாழிலிருந்து காங்கேசன்துறை வீதியூடாக காங்கேசன்துறை வரையிலும் எதிர்வரும் மே மாதம் 1 ஆம் திகதி முதல் சேவையில் ஈடுபடவுள்ளன. வடக்கு மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபையின் தலைவர் க.மகேஸ்வரன் நேற்று முன்தினம் ஊடகங்களுக்கு அனுப்பி வைத்த ஊடாக அறிக்கையிலே இவ்வாறு தெரிவித்தார். கடந்த 10 ஆம் திகதி பலாலி வீதி திறக்கப்பட்ட நிலையில் இந்த நடவடிக்கை வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகனுடன் நடைபெற்ற கலந்துரையாடலுக்கு அமைவாக முன்னேடுக் கப்பட்டுள்ளது என அதில் குறிப்பிட்டுள்ளது. (6-8)



# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 400 | 350 | 300 | 400 | 400 |
| உருளைக்கிழங்கு | 200 | 220 | 180 | 200 | 200 |
| பச்சைமிளகாய் | 250 | 200 | 300 | 250 | 250 |
| தக்காளி | 550 | 800 | 700 | 700 | 800 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 280 | 250 | 280 | 200 |
| கோவா | 350 | 300 | 300 | 350 | 400 |
| கரட் | 800 | 550 | 650 | 550 | 600 |
| பூசணி | 200 | 180 | 150 | 160 | 250 |
| புடோல் | 150 | 250 | 200 | 250 | 300 |
| வாழைக்காய் | 100 | 80 | 100 | 70 | 150 |
| சின்ன வெங்காயம் | 250 | 100-300 | 250 | 150-300 | 400 |
| பெரிய வெங்காயம் | 150 | 160 | 140 | 120 | 120 |
| பாகற்காய் | 550 | 500 | 500 | 450 | 500 |
| வெண்டக்காய் | 250 | 250 | 200 | 250 | 400 |
| கருணைக் கிழங்கு | 350 | 300 | 200 | 200 | 350 |
| பயற்றங்காய் | 300 | 180 | 200 | 350 | 300 |
| லீக்ஸ் | 350 | 250 | 250 | 200 | 250 |
| பீற்றூட் | 500 | 500 | 400 | 400 | 600 |
| கறிமிளகாய் | 800 | 350 | 450 | 450 | 800 |
| முருங்கைக்காய் | 2000 | 2500 | 2000 | 1500-2000 | 2000 |
| போஞ்சி | 600 | 650 | 650 | 500 | 800 |
| கத்தரிதம்புள்ள | 400 | 300 | 250 | -- | 350 |
| கீரை – 1 பிடி | 120 | 70-100 | 100 | 70 | 100 |
| தேசிக்காய் | 200 | 250 | 150 | 200 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 200 | 280 | 200 | 120-200 | 200-240 |
| இராசவள்ளி | 650 | 700 | 600 | 500 | 700 |
| வெங்காயப்பூ | 350 | -- | -- | -- | 800 |
| முள்ளங்கி | 100 | 150 | 150 | 120 | 320 |
| பொன்னாங்காணி | 120 | 70 | 150 | 100 | 60 |
| வல்லாரை | 60 | 70 | 80 | 80 | 100 |
| ஈரப்பலா | 150 | -- | 100 | -- | 260 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடக்கில் இன்று...

கூறியுள்ளது.

கிழக்கு, வடமத்திய மாகாணங்கள் மற்றும் மொனராகலை, அம்பாந் தோட்டை, யாழ்ப்பாணம், முல்லைத் தீவு, கிளிநொச்சி, வவுனியா மற்றும் குருநாகல் மாவட்டங்களின் சில பகுதிகளில் வெப்பச் சுட்டெண், அதாவது மனித உடலால் உணரப்படும் அளவிற்கு எச்சரிக்கை மட்டத்தில் இருக்கக்கூடும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ம-4,7)

## வடக்கு - தெற்கு...

தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில், நாட்டில் தமிழர்கள், சிங்களவர்கள், முஸ்லிம்களுக் கிடையில் பாரிய இடைவெளி காணப்பட்டது. பழைய அரசியல்வாதிகளினால் இந்தப் பிரிவினைவாதம் ஏற்பட்டது. இதன் காரணமாக வடக்கு மக்கள் வடக்கின் தமிழ் தலைவர்களையும் தென்பகுதி மக்கள் தெற்கின் சிங்களக் கட்சிகளின் தலைவர்களையும், முஸ்லிம் மக்கள் முஸ்லிம் தலைவர்களையும் தேர்ந் தெடுத்தனர்.

ஆனால் முதற்தடவையாகக் கடந்த பொதுத்தேர்தலில் வடக்கு தமிழ் மக்களும் தென்பகுதி சிங்கள மக்களும் கிழக்கு முஸ்லிம் மக்களும் தேசிய மக்கள் சக்தியைத் தெரிவு செய்தார்கள்.

மக்கள் தேசிய மக்கள் சக்தி மீது பாரிய நம்பிக்கை வைத்தமையினாலேயே தேர்தலில் எமக்கு வெற்றியைப் பெற்றுத் தந்தார்கள் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் பிரிந்திருந்த அனைவரும் தற்போது ஒன்றாகியுள்ளதாகவும் இனிமேல் நாம் பிரியவேண்டிய தேவை இல்லை எனவும் எமக்குள் பிளவு ஏற்படவும் தேவையில்லை எனவும் இனவாத அரசியல் எமக்கு இனியும் வேண்டாம் எனவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார். (ம-7,4)

## யாழ்.பல்கலைக்...

பட்டுள்ளது.

கொட்டகல புனித அன்ருஸ் தோட்டத்தைச் சேர்ந்த கருப்பையா கவிரத்தினம் (வயது-24) என்ற மாணவனே சடலமாக மீட்கப் பட்டவராவார்.

காதல் பிரச்சினை காரணமாக விபரீத முடிவெடுத்து குறித்த மாணவன் உயிரிழந்துள்ளார்.

மரணவிசாரணைகளையாழ் போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம குமார் மேற்கொண்டார். (ம-4,7,60)

## பொதுச்...

இது தொடர்பில் அவர்கள் விடுத்த அறிக்கையில், இலங்கையில் எங்கும் இல்லாத விடயங்களை யாழ். மாநகர சபையின் கணக்குப் பிரிவு எதேச்சையாக நடைமுறைப்படுத்த முயல்கிறது.

இதன் காரணமாக நாளை 28ஆம் திகதி திங்கட்கிழமை முதல் யாழ். மாநகர சபை பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் மற்றும் குடும்பநல உத்தியோகத்தர்கள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளனர்.

இதனால் யாழ்.மாநகர சபைக்குட்பட்ட பொதுச் சுகாதார சேவைகள் கர்ப்பிணித் தாய்மாருக்கான சிகிச்சைகள் பாதிக்கப்படும் அபாயம் ஏற்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.(ம-7,4)

## மருத்துவர்...

போதனா வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் வைத்திய நிபுணர் யமுனானந்தாவின் மகன்களான பிரணவன் மற்றும் சரவணன் ஆகியோர் உயிரியல் பிரிவில் தேசிய ரீதியில் 3ஆம், 5ஆம் இடங்களையும் மாவட்ட ரீதியில் முதலாம், இரண்டாம் இடங்களையும் பெற்றுள்ளனர். (ம-7,4)

## ஆட்டோ...

பட்ட மூச்சுத் திணறலால் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இதில் யாழ்ப்பாணம் வைத்திய சாலை வீதியைச் சேர்ந்த 60 வயதான நபரே உயிரிழந்தவராவார்.

குறித்த நபர் கடந்த 24ஆம் திகதி மாலை வேலைக்குச் சென்றுவிட்டு வீடு நோக்கி சென்று கொண்டிருந்தார். இதன்போது யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை வீதியில் அவர்மீது முச்சக்கர வண்டி மோதியது. பின்னர் அவர் வீட்டுக்குச் சென்றுள்ளார்.

இந்நிலையில் நேற்று முன்தினம் அதிகாலை அவருக்கு மூச்சுத் திணறல் ஏற்பட்டது.

இதனையடுத்து உடனடிச் சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டார். இருப்பினும் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் இரவு உயிரிழந்துள்ளார்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம குமார் மேற்கொண்டார். (ம-7,4)

## அனைத்து...

கிளிநொச்சியில் நேற்று நடைபெற்ற தேர்தல் பிரசாரத்தில் உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில், போரின் போது அழிக்கப்பட்ட வீடுகளை மீண்டும் கட்டியெழுப்புவதற்கு தற்போதைய அரசாங்கம் ஆதரவளிக்கும். யுத்தத்தினால் மூடப்பட்ட கிளிநொச்சியின் பிரதான வீதிகளை மீண்டும் திறக்க நடவடிக்கை எடுக்கப் படும் என்றார்.

மேலும் பாதுகாப்புக் காரணங்களுக்காக பொதுமக்களுக்குச் சொந்தமான நிலங்கள் இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பாக, சம்பந்தப்பட்ட இராணுவ அதிகாரிகள் மற்றும் தளபதிகளுடன் கலந்துரையாடப்பட்டுள்ளது.

இந்த நிலையில், பொதுமக்களின் விடுவிக்கக்கூடிய ஒவ்வொரு அங்குல நிலத்தையும் மீண்டும் அவர்களிடம் வழங்க நடவடிக்கை எடுத்து வருவதாக ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

அது மட்டுமல்லாமல, பாரம்பரியமாக விவசாயத்துக்கு பயன்படுத்தப்பட்ட நிலங்கள் கூகுள் வரைபடங்களின் அடிப்படையில் வனப் பாதுகாப்புத் துறையால் கையகப்படுத்தப்பட்டுள்ளன.

அவை மக்களால் பயிரிடப்பட்ட நிலங்கள் என்ற வகையில், முறையான ஆய்வுக்கு பிறகு அவற்றைத் திருப்பி வழங்க நடவடிக்கை எடுத்து வருவதாக ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

வடக்கில் பலர் போரினால் தங்கள் வீடுகளை இழந்துள்ளனர் என்பதையும், மீண்டும் அவற்றை கட்டியெழுப்ப வழி இல்லை என்பதையும் தாம் ஏற்றுக் கொள்வதாக குறிப்பிட்ட அவர், அந்த மக்கள் அனைவருக்கும் வீடுகள் கட்டுவதற்கு அரசாங்கம் ஆதரவளிக்கும் என்றும் தெரிவித்துள்ளார். (ம-7,4,315)

## பெறுபேறுகள்...

களுக்குப் பிரவேசித்து பரீட்சைப் பெறுபேறுகளைப் பார்வையிடலாம் என்று பரீட்சைகள் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

2024ஆம் ஆண்டுக்கான உயர்தரப் பரீட்சை கடந்த நவம்பர் மாதம் 25 ஆம் திகதி முதல் டிசம்பர் 31ஆம் திகதி வரை நாடு முழுவதும் 2312 பரீட்சை நிலையங்களில் நடைபெற்றது.

இந்தப் பரீட்சைக்கு மொத்தமாக 333,183 பரீட்சார்த்திகள் தோற்றியதுடன், அதில் 253,390 பாடசாலை பரீட்சார்த்திகளும் அடங்குவர் என பரீட்சைத் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ம-7,4)


மஹஜன சம்பத
திகதி 2025.04.26
சீட்டிழுப்பு இலக்கம் 5813
J 8 9 7 8 9 0
அத சம்பத J 7 8 9 0
சீட்டிழுப்பு இலக்கம் 0388
National Lotteries Board

தன நிதானய
திகதி - 2025.04.26
சீட்டிழுப்பு இலக்கம் - 1843
T 20 29 50 51 T
Double Chance 11825

மெகா பவர்
திகதி 26/04/2025
சீட்டிழுப்பு இலக்கம் 2161
T 16 09 11 49 59

ஜய
திகதி 2025.04.26
சீட்டிழுப்பு இலக்கம் 081
N 6 9 1 9

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 4055
சீட்டிழுப்பு திகதி 26.04.2025
I 31 34 50 61
I
தேசிய லொத்தர் சபை

ஹந்தஹன HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2025.04.26
சீட்டிழுப்பு 1122
துலாம் 07 33 48 57 துலாம்
29624 13

உத்தியோகபூர்வ முடிவுகள்
26.04.2025 வெற்றி வாரம் 521
V 3 0 8 7 3 2
62555
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.36,127,180.40
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2787
சீட்டிழுப்பு திகதி 2025.04.26 தினம் சனிக்கிழமை
01 27 51 77 F
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 58,356,816.80
DLB

சனிதா
திகதி 26.04.2025 வெற்றி வாரம் 4948
06 31 68 71 P
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 61,645,338.80
50643
DLB

சசிரி
வெற்றி வாரம் 670
சீட்டிழுப்பு திகதி 26.04.2025 சனிக்கிழமை
14 37 46
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.200,000.00
DLB

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4499
சீட்டிழுப்பு திகதி 26.04.2025 தினம் சனிக்கிழமை
01 14 38 61
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.4,905,287.20
154938
DLB

கப்ருக
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
S 02 03 09 49 51
1963
26.04.2025 சனிக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட்
DLB

அட கோடிபதி ADA KOTIPATHI
சனிக்கிழமை
வெற்றி வாரம் : 2613
சீட்டிழுப்பு திகதி : 2025.04.26
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.52,499,929.60
01 15 38 73 W
902573
DLB


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## IELTS CLASSES

கொழும்பு பல்கலைக்கழக ஆசிரியரினால்
IELTS, A1 UK EXAM, ADVANCED GRAMMAR & SPOKEN
GUARANTEED TO 7.5 in IELTS Exam.
PASS in UK A1 Exam.
Exam REGISTRATION CENTER.
**Special offer 50% Discount to all the Courses**
OXFORD ENGLISH ACADEMY, Ariyakulam Junction, Jaffna.
T.P : 077 780 3970, 074 007 1970 (3844)

## உடனடி வேலை வாய்ப்பு

### நிர்வாக உத்தியோகத்தர்



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்
**V2 TRAVELS**

எமது கிளைகள்
- கிளிநொச்சி
- சுன்னாகம்
- சாவகச்சேரி
- மானிப்பாய்
- நெல்லியடி
- பருத்தித்துறை
- திருகோணமலை
- வல்வெட்டித்துறை
- கோப்பாய்
- புத்தூர்
- பண்டத்தரிப்பு
- சங்கானை
- கொழும்பு

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
**சம்பளம் - 30'000/-**
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com (C-2823)

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378 | 076 097 3127

GraviTutor
## PHYSICS
### 2027 A/Level
GROUP & PERSONAL CLASSES
ENGLISH & TAMIL MEDIUM
**Mr.S.Vinojan**
(Medical Student)
3+ years of experience in teaching

IN-PERSON & ONLINE CLASSES
- Each chapter will be covered with a lot of practice questions & past paper questions
- Question books including 100+ model questions & all the past paper questions will be provided for each chapter
- Revision exams after each chapter

Contact No: 075-7199897 (1054)

## வேலையாட்கள் தேவை

வீட்டில் தங்கி நின்று வேலை பார்ப்பதற்கு 50 வயதுக்கு மேற்பட்ட ஆண், பெண் அல்லது தம்பதிகளாக வேலை ஆட்கள் தேவை.

**075 894 3735** (C-2815)

## Pearson International College



- இலங்கையில் முதன்முறையாக TESL தகைமையுடைய கனடா விரிவுரையாளர்கள் வழங்கும் கனடா அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட IELTS மற்றும் Diploma கற்கை நெறிகள்.
- தற்போது O/L எழுதிய மாணவர்களுக்கான Basic English, Dip in English நடைபெறுகின்றது.
- கற்பித்தல் உங்களுக்கு திருப்திகரமானதாக இல்லையெனில் 100% money back Guarantee
- எம்மிடம் கல்வி கற்று Band 7 க்கு மேல் பெற்ற மாணவர்களின் பெறுபேறுகளை பார்த்து உறுதி செய்யுங்கள்.
- இப்போது யாழ்ப்பாணம் மற்றும் வவுனியாவில் வட மாகாணத்தில் No. 1 IELTS Coaching

074 188 7878, 074 385 7584
www.picsl.lk
TESL CANADA
TESL Ontario (1009)

## காணி, வீடு விற்பனைக்கு

கைதடியில், கைதடி மானிப்பாய் வீதியில், கைதடி சந்தியில் இருந்து ½Km தூரத்தில் 5 ½ பரப்பு காணியும் வீடும் விற்பனைக்கு உண்டு. விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
தொடர்புகளுக்கு :
**077 309 3011** (4026)

## Village Hotel
### Bus Booking (A/C Bus)

பருத்தித்துறை → கொழும்பு
யாழ்ப்பாணம் → கொழும்பு
இரு வழிச் சேவை (பகல்/ இரவு)
நெல்லியடி → கொடிகாமம் ஊடாக
www.villagehotel.lk
**077 544 8503** (3992)

## வீடு வாடகைக்கு தேவை

கொக்குவில், நல்லூர்ப் பகுதி, கல்வியங்காடு, திருநெல்வேலி பகுதியில் சிறிய குடும்பம் ஒன்று வசிப்பதற்கு வீடு வாடகைக்குத் தேவை.
**077 063 3408** (C-2816)

## வேலைவாய்ப்புகள்

| | |
|---|---|
| Store Keeper | : 0777878708 |
| Sales Manager (Basic 90,000/=) | : 0779969661 |
| Branch Manager (Nursing) | : 0761407563 |
| Heavy Vehicle Driver (சாரதி) | : 0773609373 |
| Bio Medical Technician | : 0773618559 |
| Draftsman | : 0777514664 |
| Sales Rep | : 0773045177 |
| Dental Nursing Assistant Trainee | : 0767712172 |
| Labors (வேலையாட்கள்) | : 0741952751 |
| மேசன், கூலி வேலையாட்கள் | : 0770358851 |
| கிளீனிங் வேலை (பெண்கள்) | : 0761498110 |

மேலதிக யாழ், வடக்கு, கிழக்கு, கொழும்பு, மலையக வேலைவாய்ப்புகளுக்கு : dewmasweb.com
வேலையாட்கள் தேவையா : 074 138 3368
DEWMAS 51, Amman Road, Nallur (4051)

தேன் ஒரு அருமருந்து. சீனிக்குப் பதிலாக தேனைப் பயன்படுத்துவதனால், இரத்தத்திலுள்ள சீனியின் அளவு சீராகி கொலஸ்ரோலின் அளவு குறையும். இதயநோய் தாக்காது. உடல் எடை குறையும். இவ்வாறு பல பயன்களைக் கொண்டது.

## Royal றோயல் சுத்தமான தேன்



*உங்கள் முழுக் குடும்பத்தின்*
ஆரோக்கியத்தினைப் பாதுகாத்திட இன்றே பாவியுங்கள் றோயல் சுத்தமான தேன்.

**ஆய்வுகூடத்தில் தரம் பரிசோதிக்கப்பட்டு பொதியிடப்படுகிறது.**

குறிப்பு :- யாழ். மாவட்டத்தில் உள்ள அனைத்து பாமசிகளிலும், சுப்பர்மார்க்கட்களிலும், பலசரக்கு கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

Marketed By:-
சிவா நறுமணப் பூங்கா®
இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
குறிப்பு : (சத்திரத்துச்சந்திக்கு அருகாமையில்)
தொ.பே : 021 2222 567
Packed By:- Royal Industries® (C-2814)

## வேலைவாய்ப்பு

### விற்பனைப் பிரதிநிதி (Sales Rep)
- தகைமை : க.பொ.த உயர்தரம்
- முன் அனுபவம் விரும்பத்தக்கது.
- ஓட்டுனர் உரிமம் (Driving Licence)

### பட்டா றைவர் (Batta Driver)
- சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
- யாழ். நகரிலிருந்து 7 Km தொலைவிற்குள் இருத்தல் வேண்டும்.

தொடர்புகளுக்கு:
**077 326 9589**
**077 711 0164** (4024)

## வேலைக்கு ஆட்கள் தேவை

இயங்கிவரும் உணவகம் ஒன்றுக்கு தங்கி நின்று வேலை செய்வதற்கு அனுபவம் உள்ள ஆண்/ பெண் ஒருவர் தேவை.
தொடர்புகளுக்கு :
**077 609 6581** (1069)

## Happy Supermarket - உரும்பிராய்

| | | |
|---|---|---|
| 1Kg வெள்ளைச் சீனி | - 219/= | Max 10Kg |
| 1Kg Prima கோதுமை மா | - 158/= | |
| 1Kg சிவப்பு பருப்பு | - 258/= | |
| 1Kg மஞ்சள் பருப்பு | - 420/= | |
| 1Kg பொன்னி அரிசி | - 240/= | |
| 1Kg சம்பா அரிசி | - 240/= | Max 2Kg |
| 1Kg ஈக்குத்தீட்டல் (உள்நாடு) | - 217/= | |
| 1Kg கடலை | - 394/= | |
| 1Kg வெள்ளைப்பச்சை (உள்நாடு) | - 215/= | |
| 1Kg தீட்டல் பச்சை | - 245/= | |
| 1Kg அரிசிமா | - 265/= | |
| 1Kg பால் பொன்னி அரிசி | - 265/= | |
| 700g சுபோஷா (திரிபோஷா) | - 570/= | ~~590/=~~ |
| 01 அங்கர் யோக்கட் | - 45/= | ~~70/=~~ |
| 01 லங்கா கறிசோயா | - 115/= | ~~140/=~~ |



400g Anchor
1040/=
~~1100/=~~



1kg சன்லைட் பவுடர்
270/=
~~320/=~~

தரமான பொருட்களை சிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள். மேலதிக விலைக்கழிவு விபரங்களிற்கு
Facebook:- happy basket.lk
இனை நாடவும்

பலாலி வீதி,
உரும்பிராய் சந்தி. (1070)
Happy Supermarket
0777 8080 30

## காணி வீடு விற்பனைக்குண்டு

யாழ். அளவெட்டி பெரிய சங்கத்தானை சந்தியில் இருந்து 100m தூரத்திலும் A.M.A கல்வி நிலையத்தில் இருந்து 50m தூரத்திலும் நல்ல நீர்க் கிணறு, வருமானங்களும் கிடைக்கக் கூடியதாக உள்ளது. குடியிருப்புச் சூழல்.
காணியின் பரப்பு - 5 பரப்பு
தொடர்புகளுக்கு:
**076 755 8606**
**077 638 5683** (4027)

எமது 50 வருட சேவையின் ஓர் அங்கமாக பொருளாதார வாழ்வியல் இடர்களுக்கு முகம் கொடுக்கும் குடும்பங்களுக்கு தமது இறுதி மரியாதையையும் கடமையையும் செய்யக்கூடிய வகையில்

## பரிபூரணம்

சேவையை நாம் எம் மக்களுக்காக ஆரம்பித்துள்ளோம். ரூபா 35,000/- முதல் இறுதிச் சடங்கிற்கு ஏற்ற மரப்பேழை, வாகனம், உடல் பதப்படுத்தல் மற்றும் இதர சேவைகளும் ஏற்றுக்கொள்ளப்படும்.
விபரங்களுக்கு : ஈ - சன்ஸ் அந்தியகால சேவை
இல.148, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
**021 222 2695, 077 429 0613** (C-2813)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்றெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 27.04.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.